**தலைப்பு 198 – நீர்ப்பாசன அமைச்சு**

**-----------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 198 – நீர்ப்பாசன அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 செப்டம்பர் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஒக்டோபர் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கை 1.6 பந்தியில் விவரங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தி தொடர்பு | அமுல்படுத்தப்படாத பரிந்துரை | இவ்வறிக்கையின் பந்தி |
|---|---|---|
| 3.11 முகாமைத்துவ பலவீனங்கள் | அரச கணக்குகள் மீதான செயற்குழுவினால் வழங்கியுள்ள கட்டளையை நிறைவேற்றி அது தொடர்பான மதிப்பீட்டுடன் அரச கணக்குகள் மீதான செயற்குழுவிற்கு அறிகையிட வேண்டும். | 3.6 (ஆ) முகாமைத்துவ பலவீனங்கள் |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### 1.6.1.1 வருமான பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏசீஏ-1(ii) படிவம் ஆரம்ப வருமான மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீட்டிற்கு இடையே விலகள் தெளிவுரை பற்றிய கூற்றில் திருத்திய வருமான மதிப்பீடாக ரூபா 1,335,900,000 தொகை குறிப்பிடப்பட வேண்டிய போதும், அங்கு ஆரம்ப வருமான மதிப்பீடான ரூபா 1,275,355,000 தொகை திருத்திய வருமான மதிப்பீடாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக படிவத்தில் ‘‘வித்தியாசத்தை நிதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக’’ மற்றும் ‘‘வித்தியாசத்திற்கான காரணம்’’ குறிப்பிடப்பட்டிருக்காததுடன் திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 60,545,000 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை மஹவலி அதிகாரசபை இடமிருந்து பெற்றுக் கொண்ட ஆரம்ப மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் தொகை இங்கு காண்பிக்கப்பட்டுள்ளதுடன், திருத்திய மதிப்பீடு பற்றிய சரியான தகவல்கள் இல்லாத காரணத்தால் அந்த ரூபா 1,275,355,000 தொகை காண்பிக்கப்பட்டுள்ளதுடன் திருத்தம் இல்லாததால் வித்தியாசம் மற்றும் அதற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை. | வருமானக் கூற்றில் சரியான தரவுகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

#### 1.6.1.2 கணக்காய்வு சான்றுகள் இல்லாதமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவின விடய இலக்கம் 198-2-3-2506 கீழ் 2023 ஆண்டினுள் செலவிட்ட ரூபா 33,582,127,928 தொகையில் ரூபா 25,897,281,327 தொகை அதாவது 77 சதவீதம், ஏனைய செலவினத் தலைப்பு இலக்கம் 07 இல் கணக்கீட்டு உத்தியோகத்தரால் செலவிடப்பட்டு மாதாந்த கணக்கு அறிக்கை ஊடாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்குரிய செலவுகள் நி.பி. 146 (அ) மற்றும் (ஆ) ஏற்பாடுகளிற்கு இணங்க ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொண்டுள்ள போதும் அந்த உறுதிப்படுத்தலிற்குரிய தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எமது செலவின தலைப்புகளிற்குரிய ஏனைய சில செலவு விடயங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் அமைச்சிடம் காணப்படுவதுடன் ஏனைய தலைப்புகளின் செலவுகள் தொலைபேசி மூலம் விசாரித்து உறுதி செய்யப்பட்டன. கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளவாறு ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் செலவுகளை உறுதி செய்து கொள்ள இந்த ஆண்டு முதல் ஒழுங்கான முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொண்டுள்ள செலவுகளை உறுதி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றை நிறுவி நடாத்திச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அத் தொகுதியின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதி ஆக்கவூர்வமாக நடாத்திச் செல்ல தேவைான மாற்றங்களை செய்ய வேண்டுமெனவும், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டியுள்ள போதும், அவ்வாறான மீளாய்வொன்றை மேற்கொண்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக அந்த உறுதிப்படுத்தலை 2023 ஆண்டிற்காக மேற்கொள்ள முடியாது போயுள்ளதுடன் எதிர்வரும் ஆண்டு முதல் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | அவதானிப்புக்கள் பெறுமதி ரூபா | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணகோவை | | | | |
| (i) | நி.பி. 447 | 33,582,127,928 | பொது 138 படிவத்தின் பிரகாரம், செய்துள்ள செலவுகளின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள தேவையான தகவல்கள் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2506 (உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி) செலவின விடயத்திற்கு ஏற்பாடு ஒதுக்கப்படுவது அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களிற்கு ஆவதுடன் பொது செலவின பேரேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய செலவின விபரங்கள் தொடர்பான விடயங்கள் அமைச்சின் செலவின பேரேட்டின் 2506 செலவு விடயத்தின் கீழ் குறிப்பிட முடியாது. மேலும், இக் கருத்திட்டங்களில் CIGAS தொகுதி ஊடாக கணக்கீடு செய்ய வசதிகள் இல்லாததால் அவர்கள் ஒவ்வொரு மாத இறுதியிலும் அமைச்சிற்கு உறுதி செய்யப்பட்ட செலவின அறிக்கையை சமர்பிக்கின்றனர். | கருத்திட்ட செலவுகளை CIGAS தொகுதி ஊடாக கணக்கீடு செய்ய வசதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ii) | நி.பி. 571 (3) | 2,209,455 | பிரதேச செயலகத்தின் மூலம் கருத்திட்டங்கள் இற்கு ஒதுக்கிய நிதியை பயன்படுத்தாது பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வெலிமட மற்றும் எல்ல பிரதேச செயலகங்களிற்கு அனுப்பிய முறையே ரூபா 396,525 மற்றும் ரூபா 1,812,930 தொடர்பாக வெலிமட பிரதேச செயலகத்திலிருந்து மற்றும் எல்ல பிரதேச செயலகத்திலிருந்து செலவு அறிக்கையை அழைப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தா தொகையை அங்கீகாரமின்றி பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைத்திருக்கக் கூடாது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2019 ஜூன் 27 திகதிய இலக்கம் 05/2019 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 03 (உ) பந்தி | 472,184 | சேவையை விட்டுச் சென்ற அலுவலர்கள் 03 பேர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 472,184 ஆன கடனை மீள் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சேவையை விட்டுச் சென்ற டீ.ஏ.டி. தயாநந்த அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 73,062 ஆன கடன் தொகையை மாதாந்தம் செலுத்த உடன்பட்டுள்ளதுடன் அதனை அவரால் 2024.07.23 திகதி ரூபா 5000 தொகையுடன் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் அறவிட வேண்டிய கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2004 ஒக்டோபர் 11 திகதிய இலக்கம் 118 கொண்ட தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் 1.1.7 பந்தி | 434,066 | ஆண்டுகள் 5 இற்கு அதிக காலமாக இனங்காணாத கடன்படுனர் மீதியை இந்த அறிக்கை திகதி வரை இனங்கண்டு அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2017 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவி வரும் ரூபா 434,066 ஆன் கடன் மீதியை இதுவரை குறிப்பாக இனங்காண முடியாதுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் கடன் மீதியை அறவிட வேண்டும். |

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொரகஹகந்த களுகங்கை விவசாய அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு தீர்வை வரிச் சலுகை அனுமதிப் பத்திரத்தின் கீழ் 180 வாகனங்கள் மற்றும் 182 இயந்திர உபகரணங்கள் 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் இறக்குமதி செய்திருந்ததுடன் அந்த அனுமதிப் பத்திரங்களின் செல்லுமடியாகும் காலம் ஆண்டு 1 இற்கும் 2 இற்கும் இடையில் காணப்பட்டதுடன் கருத்திட்டம் 2016 ஜூலை 22 திகதியுடன் முடிவடைய வேண்டிய போதும் 2018 ஏப்ரல் 26 வரை கருத்திட்ட காலம் நீடிக்கப்பட்டுள்ள போதும் அதற்கு ஒத்ததாக குறித்த அனுமதிப் பத்திரங்களில் காலத்தை நீடிக்காது அந்த வாகனங்களை முறையற்ற பாவனைக்கு இடமிளிக்கப்பட்டிருந்தன. இறக்குமதி அனுமதிப்பத்திர நிபந்தனைகள் மீரப்படுவதால் 41 வாகனங்களை இலங்கை சுங்கத்திற்கு ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 16 வாகனங்கள் ஒப்பந்த கம்பனியினாலும் | கருத்திட்ட காலத்தை நீடித்தவுடன் அந்த வாகனங்களின் பயன்படுத்தும் காலத்தையும் நீடிக்க கோராமை அந்த கருத்திட்ட அலுவலகத்தின் தவறாகும். தற்போது அந்த அலுவலர்கள் எவரும் இல்லாததால் தகவல்களை தேடிக் கொள்ளும் இயலுமை இல்லை. ஒப்பந்தத்தின் 14:1 (b) பிரிவின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களை ஒப்பந்ததாரரினால் மீள் ஏற்றுமதி செய்வதில்லை எனில் குறித்த வரித் தொகையை செலுத்தி இந்த நாட்டில் பயன்படுத்த ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. அங்கு கருத்திட்ட பணிப்பாளரினால் தெளிவு படித்தியுள்ளது ஒப்பந்த பிரகாரம் பின்னர் ஒப்பந்ததாரரிற்கு மீள் ஏற்றுமதி செய்யாத பண்டங்களை வரி செலுத்தி சுவீகரித்துக் கொள்ள முடியுமென. | வாகன அனுமதிப் பத்திர காலத்தை நீடித்தல் மற்றும் அவற்றை ஒப்படைக்கும் சட்ட ரீதியான தன்மை, உறுதி செய்ய வேண்டும். |

எஞ்சிய 30 வாகனங்களை கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் பயன்படுத்துவதாக சுங்கத்தின் பிரதான உதவி நிவாரண அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 46 வாகனங்கள் பற்றி குறிப்பிட்டுள்ள போதும் குறித்த அட்டவணையை சமர்பிக்காத காரணத்தால் மேலதிக 5 வாகனங்களை இனங்காண முடியவில்லை. மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் (பணி ஒப்படைப்பு) இன் கடிதம் பிரகாரம் ஒப்பந்த கம்பனியினால் மோட்டார் வாகனங்களின் உரிமையை சுவீகரிப்பதற்கான கடித ஆவணங்களை சமர்பித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள போதும் அமைச்சிடம் காணப்பட வேண்டிய கடிதக் கோவை கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. இக் கருத்திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 134 வாகனங்கள் மற்றும் 182 பண்டக உருப்படிகள் ஒப்பந்ததாரரின் கோரிக்கையின் பெயரில் ஒப்படைக்க நீர்பாசன அமைச்சின் ஆட்சேபனை இல்லையென நீர்பாச அமைச்சின் மேலதிக செயலாளரினால் பொது நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரிற்கு ஒப்படைக்கப்பட்ட 16 வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் பின்னர் சுங்க கட்டளைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அறவிட முடியுமான ரூபா 476 மில்லியன் தண்டப் பணத்தை ரூபா 105 மில்லியன் வரை குறைத்து 2020 ஒக்டோபர் 15 திகதி அறவிட்டுள்ள போதும் அந்த வாகனங்கள் மற்றும் பண்டங்களை சுங்க வரி அறவிட்டு ஒப்பந்ததாரரிற்கு ஒப்படைத்ததாக கணக்காய்விற்கு உறுதியாகவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதன் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கீழ் செயற்படும் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 49,994 மில்லியன் ஆன ஆக்கபூர்வ மேம்பாடு மற்றும் நீர்பாசன தொகுதி செயற்திறன் முகாமைத்துவம் செய்யும் | 2017 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 2020 வரை வேலைகளை செய்து கொண்டு சென்றதுடன் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் ஏற்பட்ட கொவிட் வைரஸ் நிலைமையின் மீது கருத்திட்டத்தின் இலக்குகளை அடைய முடியவில்லை. தற்போது | கருத்திட்டங்கள் 2 இற்காக மேற்கொண்டுள் ள கிரயத்தில் நிதி ரீதியான நோக்கத்திற்கா |

கருத்திட்டம் (PEISEIP) மற்றும் கல்விடிகல நீர்தேக்க கருத்திட்டம் ஆகிய 2 கருத்திட்டங்களிற்கும் திட்டமிட்ட காலத்தை விட இரு மடங்கு காலம் சென்றுள்ள போதும் பூர்த்தி செய்திருக்கவில்லை. 2017 ஹ 2014 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு இருந்த அந்த கருத்திட்டங்களின் காலத்தை நீடிக்க பல்வேறு சந்தர்பங்களில் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றிருந்த போதும் அந்த தாமதம் காரணமாக பிரதான நோக்கத்தின் கீழ் இனங்கண்டிருந்த சாதகங்களை திட்டமிட்டவாறு அடைந்து கொள்ள முடியாதது தொடர்பாக பகுப்பாய்வொன்றை அமைச்சரவைக்கு சமர்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் குறித்த 2 இரண்டு கருத்திட்டங்களிற்கும் 9 ஆண்டு காலத்தினுள் மேற்கொண்டுள்ள ரூபா 2,354.05 மில்லியனான கிரயத்தில் இதுவரை தேசிய பொருளாதாரத்திற்கு எவ்வித பங்களிப்பும் கிடைத்திருக்கவில்லை.

ஏற்படுத்திக்கொண்டுள்ள கடப்பாடுகளிற்கு மாத்திரம் தேவையான ஏற்பாடு 2023 பாதீட்டின் மூலம் ஓதுக்குவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போதும் கருத்திட்டத்தை தொடர்ந்து நடாத்திச் செல்ல ஏற்பாடு வழங்கப்படவில்லை. இதற்காக செலவிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1,188.35 மில்லியனாகும். இந்த முன்னேற்றம் மொத்த கருத்திட்டத்தின் 13.16 சதவீதமான போதும் தேசிய பொருளாதாரத்திற்கு ஏதேனும் பங்களிப்பொன்று கிடைத்துள்ளது. கருத்திட்டத்தின் காலத்தை நீடித்த போதும் ஏற்பாடு கிடைக்காததால் கருத்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

தல்பிட்டிகல நீர்தேக்க கருத்திட்டத்திற்காக 2014.09.04 திகதி அமைச்சரவை அங்கீகாரம் மீது 2014.11.28 திகதி சீனாவின் நிர்மாண கம்பனி ஒன்றுடன் ஒப்பந்தத்தை கைச்சாதிடப்பட்டு 2018.08.01 திகதி சீனாவில் எக்சிம் வங்கியுடன் கடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள போதும், கடன் உடன்படிக்கை செயற்படாததால் ஒப்பந்ததாரர் வேலைத் தளத்தை விட்டுச் சென்ற போதும் விரிபான புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே காணிகளை சுவீகரித்தில் கருத்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் நீரபாசன திணைக்களத்தின் மூலமும் திட்டமிடல் நடவடிக்கைகள் CECB நிறுவனத்தின் மூலமும் செய்யப்பட்டு வருகின்றன. எனினும் இதுவரை போக்குவரத்து செய்துள்ள முற்பொருத்தற் பாலத்தை பொருத்துவது உள்ளடங்களாக பாதையின் எஞ்சிய 7 கி.மீ இனது நிர்மாணத்தை விரைவில் பூர்த்தி செய்து எஞ்சிய செயற்பாடுகளை பின்னர் செயற்படுத்துவதற்காக கருத்திட்டததை தற்காலிகமாக நிறுத்துதல் எனும் 2022.10.07 திகதிய RAMP தீரமானத்தின் பிரகாரம் கருத்திட்ட வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் முற்பொருத்தற் பால நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இரண்டு பிரவேச பாதைகளின் வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஊவபரனகம மற்றும் கந்தகெடிய இரண்டு நகரங்களையும் இணைக்கும் பிரவேச பாதையின் வேலைகள் 55 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அந்த பாதையும் இந்த ஆண்டு முடிவிற்கு முன்னர் வேலைகளை பூர்த்தி செய்யப்படவுள்ளது.

ன பங்களிப்பு தொடர்பாக மீண்டும் விசாரித்து பார்க்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கிங் நில்வலா கருத்திட்டத்திற்காக 2014.09.30 திகதிய அமைச்சரவை தீர்மாணம் பிரகாரம் 2014.11.05 திகதிய நீர்பாகன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, சீனாவின் நிர்மாண கம்பனி ஒன்றுடன் அமெ.டொ. மில்லியன் 690 பெறுமதியான பொறியியல் பெறுகைகள் மற்றும் நிர்மாண (EPC) வகையான ஒப்பந்தமொன்றிற்காக உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டிருந்தது. 2017 ஆண்டில் பூர்த்தி செய்ய உத்தேசித்திருந்த இந்த கருத்திட்டத்திற்காக ரூபா 4,011,054,982 ஆன் அசையும் முற்பணமொன்றை 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் செலுத்தப்பட்டு இருந்தது. ஆரம்ப புவியியல் ஆய்வுகள் மற்றும் அளவை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் 2015 இல் கருத்திட்டம் நிறுத்தப்பட்டது. 2023 ஆண்டு முதல் பணிகள் நீர்பாச திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள போதும் இதுவரை பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. 2023 திசெம்பர் 31 வரை ரூபா 4,089.54 மில்லியன் செலவிட்டுள்ள போதும் எவ்வித பங்களிப்பும் இந்தக் கருத்திட்டத்தின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | 2014 திசெம்பர் மாதம் மற்றும் 2015 சனவரி மாதம் நிலைப்படுத்தல் முற்பணம் (Mobilization Advance) வழங்கப்பட்டு அளவை நடவடிக்கைகள் மற்றும் விரிவான சாத்தியப்பாட்டு ஆய்வு தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. 2014 ஆண்டில் உத்தேசித்திருந்த நிர்மாணங்களை ஆய்வு செய்து கொண்டு செல்கையில் ஏற்பட்ட சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சினைகள் காரணமாக ஒரு சில மாற்றங்களை உத்தேசித்து செய்யப்பட்ட சாத்தியப்பாட்டு ஆய்வறிக்கை 2020 மே மாதத்தில் நீர்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. சுற்றாடல் பிரச்சினைகளிற்கான இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வது கடடினமாகவுள்ளது. கருத்திட்ட முகாமைத்துவ அலகின் பணிகள் 2023 மார்ச் 31 திகதி பூர்த்தி செய்யப்பட்டு நீர்பாசன திணைக்களத்திற்கு கருத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. கருத்திட்ட ஆய்வு நடவடிக்கைகளை அடிக்கடி நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதால் மற்றும் குறித்த தரப்பினரிற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள இதுவரை முடியாத காரணத்தால் கருத்திட்டத்தை முன்கொண்டு செல்லல் தாமதமாகியுள்ளதாக அறிவிக்கிறேன். | கருத்திட்டத்திற்கு 8 வருட காலத்தினுள் செய்துள்ள கிரயத்தில் ஆரம்ப நோக்கத்திற்கான பங்களிப்பு தொடர்பாக மீண்டும் விசாரித்துப் பாரக்க வேண்டியதுடன் குறித்த சுற்றாடல் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | உமா ஓய கரையிலிருந்து தென் வலயத்தின் கிரிந்திஓய கரைக்கு 145 மில்லியன் கன மீற்றல் நீரை வருடாந்தம் திருப்புவதை பிரதான நோக்காக் கொண்டு இலங்கை நீர்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் ஈரான் கம்பனியுடன் 2008 ஏப்ரல் 28 திகதி பொறியியல், பெறுகைகள் மற்றும் நிர்மாண (EPC) ஒப்பந்த முறையின் கீழ் ஒப்பந்த உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்தது. அதற்குரிய திருத்த மொத்த கிரய மதிப்பீடு | | |

| | | |
|---|---|---|
| அமெரிக் டொலர் 529.06 மில்லியன் அல்லது ரூபா 74,325.75 மில்லியனாகும். கருத்திட்டத்தை 2008 ஆண்டில் ஆரம்பித்து 07 ஆண்டுகளில் அதாவது 2015 நவம்பர் 15 திகதி பூர்த்தி செய்ய ஆரம்பமாக எதிர்பார்க்கப்பட்டது. மேற்குறித்த கருத்திட்டத்தின் தலைமையக வேலைக்காக 2023 திசெம்பர் 31 திகதி அமெரிக்கா டொலர் 504.05 மில்லின் வேலைகளை உறுதி செய்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) கருத்திட்டத்திற்கான நிதி ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி மூலம் நிதியீட்டலின் கீழ் போட்டி விலைமனு கோராது அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்ததாரரை தெரிவு செய்து 2007 நவம்பர் 27 திகதி உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்தது. 2013 ஆண்டில் ஈரான் பொருளாதார தொடர்பு காரணமாக குறித்த ஒப்படைக்கப்பட்ட கடன் தொகையை இடைநிறுத்தியுள்ள காரணத்தால் வெளிநாட்டு கடன் உடன்படிக்கையின் கீழ் அமெரிக்க டொலர் 50 மில்லியன் அல்லது ரூபா 6522.85 மில்லியன் நிதியீட்டலின் பின்னர் 2023 திசெம்பர் 31 திகதி வரை இக் கருத்திட்டத்தின் கிரயமான அமெரிக்க டொலர் 453.913 மில்லின் அல்லது ரூபா 67,737,738 மில்லியன் இலங்கை அரசின் நிதியீட்டத்தினால் நிதியடப்பட்டிருந்தது. இக் கருத்திட்டம் உள்நாட்டு நிதியத்தின் மூலம் முன்கொண்டு செல்வது தொடர்பாக தீர்மானிக்கும் போது சர்வதேச போட்டி விலைகளை கோருவதன் ஊடாக இலங்கை அரசிற்கு பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்த போட்டி நலன்கள் தொடர்பாக பதிப்பீடொன்றை மேற்கொண்டு அமைச்சரவையை அறிவுருத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான சர்வதேச ஒப்பந்தங்களில் இந்த நிலைமைகள் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் போட்டி விலைமனு கோரி திறைசேரிக்கு மற்றும் வெளிநாட்டு ஒதுக்கத்திற்கு குறைந்த பட்ச தாக்கம் ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குகிறேன். கருத்திட்டம் இறுதிக் கட்டத்திலுள்ள இவ்வாறான சந்தர்ப்பத்தில், இன்னும் மேலதிக கிரயம் மற்றும் காலமொன்றை கடந்து அமைச்சரவையை அறிவுருத்தல் பெறுவேற்றை தரக்கூடியதாக இருக்குமா என அவதானிக்கப்பட்டது. | கருத்திட்டங்களின் செயற்பாடுகளில் கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் போட்டி நலன்கள் தொடர்பாக மதிப்பீடு செய்து அமைச்சரவையை அறிவுருத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கருத்திட்டத்தை 07 ஆண்டுகளில் அதாவது 2015 நவம்பர் 15 திகதி பூர்த்தி செய்ய இருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரை தாமத காலம் 8 ஆண்டுகளை விஞ்சியிருந்தது. கருத்திட்டத்தால் எதிர்பார்த்த மின்சார உற்பத்தித் தொகுதிக்கு 120 மெகா வொட்ஸ் மின்சக்தியை சேர்ப்பதனூடாக ஒரு நாளைக்கு மின்சார சபைக்கு ரூபா 55 மில்லியனிலும் அதிக தொகை சேமிக்கப்படுவதாக கணக்கிடப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் அதன் பிரகாரம் கருத்திட்டம் 8 ஆண்டுகள் தாமதித்ததில் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 162,250 மில்லியனாக இருந்தது. மேலும் இத் தாமதம் காரணமாக மொனராகல மாவட்டத்தில் வெள்ளவாய மற்றும் தனமல்வில பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள காணி 4,500 ஹெக்டயார் மற்றும் தற்போது பயிரிடப்படும் காணி 1,500 ஹெக்டயார்களிற்கு நீர்பாசன நீர் விநியோகித்தல், குடிநீர் மற்றும் கைத்தொழிலிற்காக வருடாந்தம் 30 மில்லியன் கன மீற்றர் நீர் வழங்குதல், பதுள்ள மாவட்டத்தின் பண்டாரவல மற்றும் எடம்பிடிய பிரதேசங்களில் குடிநீர் தேவைப்பாட்டை வழங்குதல் எனும் நலன்களை அடைந்து கொள்ள முடியாதிருந்தன. | எதிர்பாராத மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களால் (திடீரென பிரதான சுரங்கத்தில் ஏற்பட்ட நீர் கசிவு, கொவிட் தொற்று நிலைமை, 2021/2022 ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவு மற்றும் அன்னிய செலாவனி செலுத்தும் கடினம்) திட்டமிட்டிருந்தவாறு பிரதான இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது போனது. அந்த தாக்கம் காரணமாக இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப் சபை, நீர்பாசன திணைக்களத்தினால் அந்த அந்த நிறுவனங்களில் இருந்து நலன்களை பெற்றுக் கொள்பவர்களிற்கு இழக்கப்பட்ட நலன்களின் பெறுதியை கணக்கிட வேண்டும். எவ்வாறாயினும் நீர்பாசன திணைக்களத்தினால் தற்போது கீழ் பள்ளத்தாக்கில் நீர்பாசன வசதிகளை வழங்க வேண்டிய காணிப் பகுதிகளிற்காக கால்வாய் நிர்மாணங்களை பூர்த்தி செய்யாததால் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் மூலம் பாரிய பண்டாசவெல நீர் கருத்திட்டத்தின் முன்நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய இன்னும் சுமார் 4 அல்லது 5 ஆண்டுகள் காலம் செல்லுமென அறிவித்துள்ளதால், கருத்திட்டம் தாமதிப்பதால் நலன்பெறுனர்களிற்கு ஏற்படும் தாக்கம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், உமாஓய கருத்திட்டத்தின் நீர் தேக்கங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது (2024 ஏப்ரல் மாதம் முதல்) மெ. வொ. 120 ஆன் நீர் மினசாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின்சார தொகுதிக்கு சேர்ப்பதனால் ஒரு நாளைக்கு அரசிற்கு கிடைக்கும் இலாபம் சுமார் ரூபா நூறு மில்லியன் ஆகும். | கருத்திட்ட காலத்தை நீடிக்கும் போது கருத்திட்ட பிரதான நோக்கங்களின் கீழ் இனங்கண்டுள்ள நலன்கள் தாமதித்தல் மற்றும் அதற்காக மேற்கொள்ள நேரிடும் மேலதிக கிரயம் தொடர்பாக பகுப்பாய்வொன்றை செய்து அறிக்கையிட வேண்டும். |
| (iii) | கருத்திட்ட தாமதத்தின் மூலம் சேவை பெறுனரான இலங்கை குடியரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டம் மற்றும் அதற்குரிய காலக் கிரயத்தை கணக்கிட்டு EPC ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடும் இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. கருத்திட்டத்திற்குரிய 71 அமைச்சரிவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதும் அந்த எச்சந்தர்பத்திலும் ஒப்பந்த உடன்படிக்கையின் 8.7 பிரிவின் | மேற்குறித்த காரணங்களினால் கருத்திட்ட காலம் எதிர்பாராத வாறு சுமார் 8 ஆண்டுகளினால் தாமதமானது உண்மையான போதும, அவ்வாறு தாமதிப்பதற்காக தாக்கம் செலுத்திய காரணங்கள் சேவை வழங்குனர் மற்றும் ஒப்பந்ததாரரினால் உடன்பாட்டிற்கு வந்த பின்னர் சில கால நீடிப்புக்கள் வழங்கியுள்ளதால் அந்த கருத்திட்டம் தாமதித்த கால எல்லைக்காக காலக் கிரயத்தை கணக்கிடுவது நடைமுறை சாத்தியமற்றதுடன் ஒப்பந்த நிருவாகத்தினுள் அவ்வாறான கணக்கிடலொன்றை செய்து அமைச்சரைவையை அறிவுருத்துதல் | எதிர்பார்த்த நலன்களை உடன்படிக்கை நிபந்தனைகள் பிரகாரம் ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிடுவது தொடர்பான தகவல்களை அமைச்சரவை அனுப்ப வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் ஒப்பந்த பெறுமதியின் 0.01 சதவீதம் வீதம் உச்சம் 5 சதவீதம் வரை அதாவது அமெ.டொலர் 26.453 இனை தாமதக் கட்டணமாக அறவிட முடியுமென அமைச்சரவையை அறிவுருத்தி இருக்கவில்லை. தாமதக் கட்டணமாக அறவிட்டிருந்த அம.டொலர் 6,631,364 தொகை மாத்திரமாவதுடன் அமைச்சரிவை தீர்மானம் பிரகாரம் அத் தொகையிலிருந்து அமெ.டொலர் 5,305,091 இனை மீண்டும் ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | தாமதமில்லை. | |
| (iv) | இக் கருத்திட்ட உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்காக 2023 சனவரி 08 திகதி நீர்பாசன அமைச்சரினால் சமர்பித்திருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் கருத்திட்டத்தை முடிவுறுத்துவதற்கான காலத்தை 2023 ஜுன் 30 திகதி வரை முன்மொழிந்திருந்தது. அதற்காக நிதி அமைச்சரினால் சமர்பித்திருந்த 2023 சனவரி 16 திகதிய அவதானிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் கருத்திட்டம் தொடர்ந்தும் தாமதமாவதன் காரணமாக தாமதமாகும் ஒவ்வொறு தினத்திற்கும் தேசிய மின்சார தொகுதிக்கு தினந்தோறும் 120MW மின்சார அளவை சேர்க்க முடியாததால் இலங்கை மின்சார சபைக்கு வெளித் தரப்பினர்களிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய ஒரு நாளைக்கு சுமார 100 மில்லியனை மேலதிகமாக செலவிட நேரிடுவதால் ஒப்பந்ததாரரினால 2023 ஜுன் 30 திகதி கருத்திட்டத்தை முடிவுறுத்த முடியாதெனில் அத்திகதியின் பின்னர் செல்லும் ஒவ்வொறு நாட்களிற்கும் ஒப்பந்ததாரரிடம் இருந்து உரிய நட்ட ஈட்டை பெற்றுக் கொள்ள முடியுமானவாறு கருத்திட்ட காலத்தை நீடிக்கும் உடன்படிக்கையை தயாரிக்க | ஒப்பந்த நிபந்தனைகள் பிரகாரம் கால நீடிப்பிற்கு கோரும் போது எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒப்பந்த பெறுமதயில் எவ்வித மாற்றமும் இடம்பெறாதால், எவ்வித மேலதிக கிரயமும் ஏற்படவில்லை. அதன் பிரகாரம், அவ்வாறான கிரயமொன்றை ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிடுவது தொடர்பாக அவர்களை அறவுறுத்தும் தேவை ஏற்படவில்லை.<br>மேற்குறித்த அமைச்சரவை பத்திரத் தொகை, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் அவதானிப்புக்களின் இறுதி பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு "ஒப்பந்ததாரரிற்கு மேற்குறித்த காலத்தில் செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளையும் செலுத்திய பின்னர் 2023.06.30 திகதிக்கு ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்ய இயலாதெனில் மாத்திரம் அவரிடமிருந்து உரிய நட்டஈட்டை அறவிட இகருத்திட்ட காலத்தை நீடிக்கும் உடன்படிக்கை தயாரிக்க வேண்டுமென" குறிப்பிடப்படுகிறது. எனினும் அத்திகதியளவில் நாட்டில் நிலவிய அன்னிய செலாவனி பற்றாக்குறை, எரிபொருள் பிரச்சினை, மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் திறைசேரியிலிருந்து உரிய நேரத்திற்கு நிதி கிடைக்காத காரணத்தால் தொழில் வழங்குனர் தரப்பினரிடமிருந்து, ஒப்பந்ததாரரிற்கு செலுத்தவுள்ள தொகையை முழுமையாக பெற்றுக் கொடுக்க முடியவில்லை. அதனால் இவ்வாறு ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடுவது அல்லது கால நீடிப்பு திருத்த உடன்படிக்கையொன்றை கையொப்பமிடும் தேவைப்பாடு ஏற்படவில்லை. | காலத்தை நீடிக்க முன்னர் தாமதித்துள்ள காலக் கிரயத்தை கணக்கிட்டு உடன்படிக்கை பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தாமத காலத்திற்காக கணக்கிட ஒழுங்கான முறைமையொன் றை தயாரித்து ஒப்பந்ததாரரின் இணக்கப்பாட்டுடன் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டுமென நிதி அமைச்சர் முன்மொழிந்திருந்தார். அவ்வாறாயினும் அதற்கு இணங்க உடன்படிக்கையை தயாரிக்காது அமைச்சரவை தீர்மானத்தினை கவனத்திற் கொள்ளாது கருத்திட்ட காலத்தை நீடித்து கருத்திட்டத்தை செயற்படுத்தியிருந்தது. மேலும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரசிற்கு மேலதி செலவுச் சுமையில்லாதவாறு நீடிக்கப்படும் காலத்தினுள் கருத்திட்ட வேலைகளை முடிவுறுத்த வேண்டுமென நியமிக்கப்பட்டுள்ளதால் EPC ஒப்பந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளிற்கு இணங்க கால நீடிப்பு செய்யப்படுவதால் ஏற்படும் கிரயத்தை ஒப்பந்ததாரரினால் ஏற்க வேண்டுமென மற்றும் உரிய திகதியில் கருத்திட்டத்தை பூர்த்தி செய்யாத காரணத்தால் ஏற்படும் பாதகமான கிரயத்ஜை அறவிட நேரிடுவதாக ஒப்பந்ததாரரிற்கு அறிவிக்க வேண்டியிருந்த போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | | |
| (v) | ஒப்பந்ததாரரினால் 2023 ஜுன் மாதம் சமர்ப்பித்திருந்த இரண்டாவது உரிமை கோரும் பட்டியலின் மூலம் காலத்தை நீடிப்பதற்குரிய 8 காரணங்களிற்காக அமெரிகா டொலர் 105,159,108 கோரப்பட்டிருந்தது. அதனுள் 2020 திசெம்பர் முதல் 2023 ஜுலை வரை நீடித்த கால எல்லைக்காக தனிநபர் கிரயம் அமெரிகா டொலர் 56,152,590 மற்றும் இயந்திர உபகரண கிரயம் அமெரிகா டொலர் 4,555,841 உம் 2020 மார்ச் 21 முதல் 2020 ஜுன் 15 வரை நீடித்த கால எல்லைக்காக தனிநபர் கிரயமாக அமெரிகா டொலர் 10,402,273 மற்றும் இயந்திர உபகரண கிரயமாக அமெரிகா டொலர் 403,089 உம் உள்ளடக்கப்பட்டிருந்தன. அங்கு FIDIC சர்வதேச உடன்படிக்கை நிபந்தனைகள் மற்றும் அமைச்சரவை முடிவுகள் மூலம் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளை கவனிக்காது ஒப்பந்த நிருவாக நடவடிக்கைகள் | ஒப்பந்த நிருவாகம் செய்யும் போது சர்வதேச உடன்படிக்கை நிபந்தனைகள் (FIDIC) மற்றும் அமைச்சரவை தீர்மானங்களின் போது விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் எவ்வித சந்தர்ப்பங்களிலும் மீறுவதற்கு அல்லது மாற்றமாக நடவடிக்கை செய்யப்படவில்லையென கூர விரும்புகிறேன். | அமைச்சரவை விஞ்ஞாபனங்க ளை சமர்ப்பிக்கும் போது சரியான தகவல்களை உள்ளடக்க பொறுப்பேற்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன் இந்த உரிமை கோரல் தொடர்பான தகவல்கள் அல்லது ஒப்பந்ததாரரிடமிருந்து தாமதக் கட்டணம் அறவிடுவது தொடர்பாக மேற்குறிப்பிடப்பட்ட விஞ்ஞாபனத்தினுள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) | கருத்திட்டத்தின் தாமதங்களிற்காக ஒப்பந்ததாரர் தாமதக் கட்டண உரிமையாக அமெரிக்க டொலர் 181,337,171 ஆன தாமத கட்ணமொன்றை கோரியிருந்தார். இது தொடர்பாக கண்டறிந்து பரிந்துரை முன்வைப்பதற்காக அமைச்சரவையினால் 7 உத்தியோகத்தர்களைக் கொண்ட கலந்துரையாடல் தீர்வுக் குழுவொன்று நியமித்திருந்ததுடன் அக் குழுவினால் இந்த கருத்திட்டத்தின் ஒப்பந்ததாரரினால் கணிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அமெரிக்க டொலர் 181,337,171 ஆன தாமத கட்டணத்திற்கு பதிலாக, அமெரிக்க டொலர் 19,517,082 ஆன தாமத கட்டணமொன்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஈரான் அரசிற்கு விதிக்கப்பட்டிருந்த பொருளாதார தடை மற்றும் ஏனைய கஷ்டங்கள் காரணமாக ஒப்பந்ததாரர் முகம் கொடுக்கப்டும் நிதிசார் தடைகளிற்காக கருணையுள்ள காரணங்கள் மீது அமைச்சரவை விருப்பத்தின் பிரகாரம், அமெரிக்க டொலர் 19,094,795 ஆன மேலதிக கட்டணமொன்று செலுத்துவதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமெரிக்க டொலர் 38.62 மில்லியன் தாமத கட்டணமாக செலுத்துவதற்கு குழு பரிந்துரைத்து நியாயப்படுத்தி அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இந்த அவதானிப்புடன் இணங்குகிறேன். தற்போது மின்சார சபையிக்கு வழங்கியிருந்த தொகையிலிருந்து மேற்குறித்த உரிமைக்காக அ.டொ. 19.071 மில்லியன் (ரூபா 5,481.79 மில்லியன்) தற்போது செலுத்தப்பட்டுள்ளது. | தாமத கட்டண உரிமையை கண்டறிந்து கணிப்பிட வேண்டும். |
| (vii) | ஒப்பந்த காலத்தை நீடிக்கும் போது “அரசிற்கு மேலதிக செலவினம் இன்றி நீடிக்கப்பட்ட கால எல்லையினுள் அனைத்து | இந்த அவதானிப்பு சரியானது. இந்த நிதித் தவறை சரிசெய்யும் கால (Defects Liability Period) முடிவில் இலங்கை மின்சார சபை | மேலதிக கட்டண உரிமையை கண்டறிந்து |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணங்களையும் நிறைவு செய்து கருத்திட்டத்தை முறையாக அரசிற்கு ஒப்படைத்தல்” எனும் நிபந்தனையை விதித்திருந்த போதும் அந்த நிபந்தனை தொடர்பாக கவனம் செலுத்தி இருக்காமை, குழு பரிந்துரையினுள் கருணையுள்ள காரணங்கள் மீது அமைச்சரவை விருப்பத்தின் மீது அமெரிக்க டொலர் 19,094,795 ஆன மேலதிக கட்டணமொன்று செலுத்த நிச்சயிக்கப்படாத மற்றும் தொழில் ரீதியான பயன்பாடின்றி பரிந்துரை உள்ளடக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய தொகையாகும் | கணக்கிட வேண்டும். |
| (viii) | கருத்திட்டத்தின் மீளாமைப்பு வழியின் ஆரம்ப திட்டத்திற்கு உட்படுத்தியிருந்த புஹுல்பொல அணையை நிர்மாணிக்கும் முதன்மை தேவையாக காணப்பட்ட பதுள்ளை, வெலிமட பாதையிலுள்ள பழைய பாதியின் மேலதிகமாக 250 மீற்றர்களை நீடித்து பூர்த்தி செய்ய ஒப்பந்ததாரரினால் தனது விடயப் பரப்பிற்கு மாற்றமாக ஏதேனும் பாதை அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்வைத்த ரூபா 133,476,320 ஆன மதிப்பீட்டை அங்கீகரித்து தனது பட்டியல்களில் இருந்து குறைத்து கொடுப்பனவு செய்ய விருப்பம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த பாதையை செய்வதற்கு பாதை அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டிருந்த போதும், பாதை செய்யப்பட்டிருக்காததுடன் புஹுல்பொல அணை வேலைத் தள பிரவேச பாதையை மற்றும் புதிய பாதையை அமைக்க 1,514,094 அமெரிக்கா டொலர்கள் மதிப்பிடுப்பட்டு அவற்றில் 115,156 அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டிருந்தன. | புஹுல்பொல By pass Road இல் மேலும் நிர்மாணிக்க எஞ்சியுள்ள 250 மீற்றர் பகுதியை எதிர்காலத்தில் பாதை அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்க உத்தேசித்துள்ளதுடன் இதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம்மொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்து.<br><br>இலங்கை பாதை அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய A05 பாதையின் (பேராதெணிய, வெலிமட, பதுள்ளை, செங்கலடி பாதையின்) கி.மீற்றர் 93 கம்பம் மற்றும் 95 கம்பத்திற்கு இடையே கி.மீற்றர் 1.9 ஆன பகுதி புஹுல்வெல அணையை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்க நேர்ந்ததால், அந்த பாதையில் வாகன போக்கு வரத்தை பேணிக் கொள்ள புதிய பாதைப் பகுதியொன்றை (By pass Road) நிர்மாணிக்க நேரிட்டது. ஒப்பந்ததாரரான ஈரானின் Farab Company (FC) இனால் பதுள்ளையை நோக்கி, மேற்குறித்த பாதையை மீள் நிர்மாணிக்க மேலதிகமாக அமைந்துள்ள பாதையின், மேம்படுத்த இணங்கியுள்ள மீற்றர் 250 தூரம் தவிர இந்த பாதையின் நிர்மாணம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட பாதைப் பகுதி தற்போது இலங்கை பாதை அபிவிருத்தி அதிகாரசபைக்கு முறையாக ஒப்படைத்து பயன்படுத்தப்படுகிறது.<br><br>இலங்கை பாதை அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கியுள்ள மதிப்பீட்டுத் தொகையின் வரி இன்றிய பெறுமானமான ரூபா 110,709,836 | ஆரம்ப மதிப்பீட்டிற்கு மாற்றமாக ஒப்பந்ததாரரினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்த அலுவலரிற்கு எதிராக ஒழக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொகையை அவர்களின் கொடுப்பனவு வவுசர்களில் இருந்து குறைத்துக் கொள்ள பெறுகைகள் குழுவினால் பரிந்துரைத்துள்ளது.<br><br>மேலும் புஹுல்பொல அணை வேலைத் தள உட்பிரவேச பாதை மற்றும் 1.98 கி.மீற்றரான புதிய பாதையை அமைக்க 1,514,094 அமெரிக்க டொலர்கள் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் புஹுல்பொல அணை வேலைத் தள உட்பிரவேச பாதை நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இலங்கை பாதை அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கான மொத்த தொகையான அமெரிக்க டொலர் 115,156 ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டுள்ளது. புதிய பாதையில் இதுவரை ஒப்பந்ததாரரினால் பூர்த்தி செய்துள்ள தூரத்திற்குரிய (கி.மீ.1.73) தொகையான அமெரிக்க டொலர் 1,202,667 அவர்களிற்கு தற்போது செலுத்தியுள்ளதுடன் அந்தப் பகுதி RDA இற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | |
| (ix) | கருத்திட்டத்தின் பிரதான சுரங்கத்தில் ஏற்பட்ட நீர் கசிவிற்கு நட்டஈடாக ஒப்பந்ததாரரினால் குறித்த காப்புறுதி கம்பனியிடமிருந்து அமெரிகா டொலர் 5,000,000 ஆன நட்டஈட்டை பெற்றிருந்தது. ஒப்பந்ததாரரினால் நட்டஈட்டு தரப்பினரிற்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டிற்காக 2021 ஆகஸ்ட் 31 திகதி வரை அரச தொகையில் ரூபா 1,931,346,396 செலுத்தியிருந்ததுடன் அரசினால் செலுத்திய நட்டஈட்டுத் தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிட வேண்டுமென 2019 மே 22 திகதி கணக்குகள் மீதான செயற்குழுவினால் கட்டளையிட்டிருந்த போதும் அவற்றில் ரூபா 1,124.62 மில்லியன் கணக்காய்வு திகதி வரையும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. அவர்களிடமிருந்து அறவிட்ட தொகையை மீள் செலுத்துமாறு ஒப்பந்ததார கம்பனியினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. மேலும் பாதிக்பிற்குற்பட்ட மக்களிற்கு செலுத்திய நட்டஈட்டுத் தொகை மற்றும் குடிநீர் | கருத்திட்டத்தின் பிரதான சுரங்கத்தில் ஏற்பட்ட நீர் கசிவிற்கு நட்டஈடாக இலங்கை அரசினால் ஒப்பந்ததாரரிற்கு பதிலாக செலுத்தியிருந்த ரூபா 1,931.34 மில்லியனான தொகையில் கணக்காய்வு திகதி வரை ரூபா 1,124.62 மில்லியன் அறவிடப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே, இது வரை ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிட்டிருந்த தொகையை மீண்டும் அவர்களிற்கு செலுத்துமாறும் கோரிக்கை விடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ஒப்பந்ததாரரினால் நட்டஈடு செலுத்துதல் மற்றும் குடிநீர் வழங்கலிற்காக செய்திருந்த தொகையான 6.108 அமெரிக்க டொலர் செலவை மீள்நிரப்புமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | அரசினால் செலுத்திய நட்டஈட்டுத் தொகையை ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிட வேண்டுமென கணக்குகள் மீதான செயற்குழுவினால் வழங்கிய கட்டளையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்களிற்காக கம்பனியினால் செய்துள்ள 6.108 மில்லின் அமெரிகா டொலர் செலவையும் வழங்குமாறு கம்பனி கருத்திட்டத்திடம் கோரியிருந்தது. | | |
| (x) | நீர்பாசன அமைச்சரினால் 2024 பெப்ரவரி 05 திகதி முன்வைத்திருந்த இலக்கம் அமப/24/0044/623/002 கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக வழங்கிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் உமாஓய பலநோக்கு அபிவிருத்தி கருத்திட்டத்தின் 514 மில்லியன் அமெரிக்கா டொலர் கிரயமொன்றில் பூர்த்தி செய்த கருத்திட்ட நிர்மாணப் பணிகள் 2024 மார்ச் 31 திகதி பூர்த்தி செய்ததுடன் கருத்திட்ட முகாமைத்துவ அலகின் மூலம் கருத்திட்டத்தை பராமரிக்கும் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மஹவெலி அதிகாரசபை எனும் நிறுவனங்களிற்கு அதன் இயக்க நடவடிக்கைகளை ஒப்படைத்து சொத்துக்கள் மற்றும் ஆவணங்களை ஒப்படைக்க வேண்டியிருந்த போதும் குறித்த சொத்துக்கள் மற்றும் ஆவணங்களை பராப் கம்பனியிடம் இருந்து கருத்திட்ட முகாமைத்துவ அலகு பொறுபேற்று குறித்த நிறுவனங்களிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதுவரை (2024.08.05) கருத்திட்ட இயக்க மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை பொறுப்பேற்கும் இலங்கை மஹவெலி அதிகாரசபைக்கு புஹுல்ஓய நீர்தேக்கம் மற்றும் சார்ந்த காணிகள் மற்றும் டயபரா நீர்தேக்கம் மற்றும் சார்ந்த காணிகளுடன் தொடர்பான சுரங்கம் (Link Tunnel) ஒப்படைக்கப்பட்டு உள்ளன. அவ்வாறே நிலத்தின் கீழான மின்உற்பத்தி நிலையம் மற்றும் Switch Yard, டயபரா அலிகோடார பிரதான சுரங்கம் (15KM HR Tunnel), Switch Yard/ Badulla Transmission Line ஆகிய சொத்துக்கள் தற்போது பௌதீக ரீதியாக இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும் மேலும் பூர்த்தி செய்யப்பட சிறிய வேலைப் பகுதிகள் காணப்படுவதனால் தவறுகளை சீராக்கும் கால முடிவில் இறுதிக் கிரயத்தை கணக்கிட்ட பின்னர் அந்த அந்த இரண்டு நிறுவனங்களிற்கும் சொத்துக்களின் நிதி ரீதியான பெறுமதிகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் பராப் கம்பனியிடமிருந்து கருத்திட்ட முகாமைத்துவ அலகிற்கு பொறுபேற்று குறித்த நிறுவனங்களிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (xi) | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழுவிற்கு (SCAPC) பரிந்துரை சமர்பிப்பதற்காக நீர்பாசன அமைச்சினால் நியமிக்கப்பட்ட தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கருத்திட்ட காலத்தை நீடிக்குமாறு பரிந்துரைத்திருந்தது. அதன் பிரகாம் FARAB கம்பனியுடன் செய்து கொண்ட உடன்படிக்கை நேரசூசியை திருத்துதல் மற்றும் கருத்திட்ட பணிப்பாளர் உள்ளடங்களாக கருத்திட்டத்திற்கு தேவையான | ஒப்பந்ததாரரிடமிருந்து நட்டஈட்டை அறவிடும் உடன்படிக்கை ஒன்றிற்கு உட்படும் தேவைப்பாடு ஏற்படாததால் இந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அது தொடர்பாக மீண்டும் குறிப்பிடப்படவில்லை. | அமைச்சரவை விஞ்ஞாபனத்தை முன்வைக்கும் போது சரியான தகவல்களை உள்ளடக்க பொறுப்பேற்க வேண்டும். |

குறைந்தபட்ட ஆளணியினரின் சேவைக் காலத்தை நீடித்தல் எனும் தலைப்பில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்பித்திருந்த போதும் அங்கு 2023 ஜுன் 30 திகதியின் பின்னர் செலவிடும் ஒவ்வொறு நாட்களிற்கும் ஒப்பந்ததாரரிடம் இருந்து உரிய நட்டஈட்டை பெற்றுக் கொள்ள வேண்டுமென கடந்த அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்தாதது தொடர்பாக எவ்வித குறிப்பும் இடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாதுருஓய தெற்குக் கரை கால்வாய் அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்திற்காக ரூபா 38,500.90 மில்லியன் மதிப்பிட்டிருந்ததுடன் பிரதான கால்வாய் உள்ளடங்களாக 14 அபிவிருத்திப் பணிகளை செயற்படுத்த

திட்டமிடப்பட்டிருந்தது.

(i) கருத்திட்டத்தை செயற்படுத்த 2021 முதல் 2023 வரை ரூபா 1,689,000,000 ஏற்பாடு ஒதுக்கப்பட்டு அவற்றில் ரூபா 836,104,531 அதாவது 50 சதவீதம் மாத்திரம் செலவிட்டுள்ள போதும், முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை இனங்கண்டு செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை. அங்கு பிரதான கால்வாய்க்காக முன்னுரிமை வழங்காது ரூபா 7,475 மில்லியன் மதிப்பீட்டின் மீது பாலம் உள்ளிட்ட பிரதான சந்தை பாதையை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தது. அதன் கீழ் தம்மின்ன முதல் வலமன்டிய வரை பாதையை கிலோ மீற்றர் 0+630 සිට කිලෝමීටර් 4+030 வரையான பகுதியை மேம்படுத்த ரூபா 93,459,575 மதிப்பீடு 2021 ஜுலை 30 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 செப்டம்பர் வரை பெறுமதி சேர்க்கப்பட்ட வரி

தம்மின்ன வலமன்டிய பாதையை 0+630 Km முதல் 3+400 Km வரையான பகுதி கருத்திட்ட நிலத்திற்கு பிரவேசிக்கும் பிரதான மற்றும் குருகிய பாதையாகும். ஒப்பந்த இலக்கத்தின் MORBDP/Con/Rd/2021-11 கீழ் மேம்படுத்திய பகுதியை பயன்படுத்த முடியாத அளவிற்கு உடைந்திருந்தது. நீர்பாசன அமைச்சு 2021, 2022, 2023 ஆண்டிற்காக ரூபா மில்லியன் 1,000, 4000, 4000 வீதம் ஒதுக்கியது. அதன் பிரகாரம் அலகு 01 இன் அனைத்து நிர்மாணங்களையும் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டது. அதற்கு ஒத்ததாக கருத்திட்டத்திற்கு பிரவேசிக்கும் பாதையை பயன்படுத்த முடியுமானவாறு மேம்படுத்த வேண்டியிருந்தது. இப் பாதையை நவீனமயமாக்கல் 2021 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சின் மேலதிக செயலாளரின் (தொழிநுட்ப சேவைகள்) அங்கீகாரத்தின் கீழ் ஒப்பந்த ஒப்படைப்பு 2021.07.16 திகதி மேற்கொள்ளப்பட்டு 2021 ஜுலை 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 2021 Covid தொற்று மற்றும் டீசல் மற்றும் தார் சார்ந்த உற்பத்திகள் சந்தையில் பற்றாக்குறை காரணமாக 2022 மார்ச் மாதம் முதல்

முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை இனங்கண்டு செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்து வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடங்களாக ரூபா 82,985,198 செலவிடப்பட்டு இருந்தது. குறித்த பாதையை மறுசீரமைக்கும் போது சரியான திட்டமின்றி பாதையின் சில சில இடங்களில் கி.மீ. 3.4 அகழ்வு செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த நடவடிக்கைகளிற்கான தடைகள் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டன. நிர்மாணப் பொருட்கள் சந்தையில் இல்லாதிருந்தமை, எரிபொருள் தட்டுப்பாடு ஆரம்பத்திலிருந்து 159 நாட்களிற்கு அதிக காலம் அனைத்து வேலைகளும் பல சந்தர்பங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. அதனால் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் 20.6 பிரிவு மற்றும் 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் பரஸ்பரமாக (மாற்று வழி) முடிவுறுத்த பரிந்துரைக்கப்பட்டது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் 14 திகதி பரஸ்பரமாக உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டது. அவ்வாறே மேலதிக வேலைகள், மேலதிக வேலைகள் மற்றும் கைவிடப்பட்ட வேலைகளின் (deleted works) தேறிய பெறுமதி (net variation) ரூபா 4,944,744.63 ஆகும். அதற்கான அங்கீகாரம் கருத்திட்ட பணிப்பாளரினால் 2022.09.14 திகதி வழங்கப்பட்டுள்ளது.<br>அவ்வாறே ஒப்பந்த ஒப்படைப்பின் விலை அதிகரிப்பிற்கு ஒப்பந்த பெறுமதியின் 7 சதவீத அளவை ஒதுக்கியிருந்த போதும், நிலவிய நிலைமையின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கைகளின் படி மேற்கொண்ட வேலைகளிற்கான முழுமையான விலை அதிகரிப்பு ரூபா 12,067,706 ஆனது. இதற்காக அமைச்சின் மேலதிக செயலாளர் (தொழிநுட்ப மற்றும் பெறுகைகள்) பெற்றுக் கொண்ட அங்கீகாரத்தின் பிரகாரம் செலுத்தப்பட்டது. | |
| (ii) | ரூபா 93,459,575 கிரயத்தின் கீழ் தம்மின்ன வலமன்டிய பாதையை கிலோ மீற்றர் 0+630 Km முதல் 3+400 Km வரையான பகுதியை கார்பட் பரப்புவதற்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டிருந்தது. இலங்கை மஹவெலி அதிகாரசபையினால் மணல் அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்கிய இடத்திற்கு பிரவேசிக்கும் வசதியை நோக்காக்க கொண்டு இப் பாதையை நிர்மாணிக்க முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. அங்கு தம்மின்ன வலமன்டிய பாதையை கார்பட் பரப்பி அபிவிருத்தி செய்ய திட்டமிட்டிருந்த போதும் அங்கு ABC இட்ட பின்னர் கார்பட் பரப்புவதற்கு பதிலாக தார் தட்டொன்றை இட்டு நிர்மாணம் | பாதையின் ஓராண்டிற்கும் குறைந்த காலத்தினுள் பழுதுகள் ஏற்படுவது தொடர்பாக நீர்மாசன அமைச்சு 2021 - 2023 மதிப்பீட்டு எதிர்வு கூறலின் பிரகாரம் 2021, 2022, 2023 ஆண்டிற்காக ரூபா மில்லியன் 1,000, 4000, 4000 வீதம் ஒதுக்கியது. அதன் பிரகாரம் அலகு 01 இன் அனைத்து நிர்மாணங்களையும் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டது. அதற்கு ஒத்ததாக கருத்திட்டத்திற்கு பிரவேசிக்கும் பாதையை பயன்படுத்த முடியுமானவாறு இப் பாதையை நவீனமயமாக்கல் 2021 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே இப் பாதையின் அளவை நடவடிக்கைகள் 2021 மார்ச் மாதத்திலும், மதிப்பீடு அங்கீகரித்தல் 2021.04.22 திகதியும், டென்டர் நடவடிக்கைகளிற்காக பத்திரிகை அறிவித்தல் 2021.05.01 திகதியும் பிரசுரிக்கப்பட்டது. இவ் ஒப்பந்தம் 2021 | திட்டமிட்டவாறு பாதையின் வேலைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதன் போதும் மொத்த கிரயம் ரூபா 45,241,775 ஆன் வேலைப் பகுதி முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. அது பற்றி கவனத்திற் கொள்ளாது பரஸ்பர இணக்கப்பாட்டுடன் உடன்படிக்கையை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஜுலை 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 2021 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை Covid தொற்று காரணமாக நிர்மாணப் பணிகளிற்கு தடை ஏற்பட்டது. டீசல் மற்றும் தார் சார்ந்த உற்பத்திகள் சந்தையில் பற்றாக்குறை காரணமாக 2022 மார்ச் மாதம் முதல் ஒப்பந்த நடவடிக்கைகளிற்காக தடைகள் ஏற்பட்டன. அவ்வப் போது ஒப்பந்ததாரரினால் இந்த தடைகளை எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. | |
| (iii) | ரூபா 82,985,198 செவிட்டு கிலோ மீற்றர் 3.4 ஆன இப்பாதையை ABC பரப்பி இடைநடுவே வேலைகள் நிறுத்தப்பட்டிருந்த பாதை ஓராண்டிற்கு குறைந்த காலத்தில் இடைக்கிடையே பழுதடைந்திருந்தது. அவ்வாறான போதும் சேத புனரமைப்பிற்காக வைப்பொன்றை அல்லது ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிட்டிருக்காததுடன் சேதத்தை அறவிட்டு அல்லது பாதையை புனரமைத்தோ இருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் 20.6 பிரிவு மற்றும் 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் பரஸ்பரமாக (மாற்று வழி) முடிவுறுத்த பரிந்துரைக்கப்பட்டது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் 14 திகதி பரஸ்பரமாக உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டது. அவ்வாறே பொதுவாக ABC பரப்பிய பின்னர் Prime Coat மேவுகை செய்யப்படுவதுடன், அதன் பின்னர் Asphalt Concrete பூசப்பட வேண்டும். எனினும் மேற்குறித்த விடயங்களின் பிரகாரம் Asphalt Concrete பூச இயலாது போனது. அதன் காரணமாக இந்தப் பாதை பழுதடைவது தவிர்கக முடியாததாகும். மாதுஓய தெற்குக் கரை பிரவேசத்தில் போன்றே, அதற்கு மாற்றமாக செயற்படுத்திய மணல் பாதிரியின் ஊமாக அகற்றிய மணலும், வலமன்டிய தரைப் படை முகாமின் வாகனங்களும், போக்கு வரத்து செய்வது இந்த பாதை ஊடாகவாகும். இந்த நிலைமைகளின் கீழ் Prime Coat மேவுகை மாத்திரம் மேற்கொள்ளப்படும் பாதையொன்று பழுதடைவதனை தவிர்க்க முடியாத விடயமாகும். 2023 ஆண்டில் இந்த பிரவேச பாதைக்கு கார்பட் பரப்புவதற்கு மதிப்பீ இலக்கம் 02 இன் கீழ் சமர்ப்பித்துள்ள போதும், இந்த நிகழ்சித் திட்டத்திற்காக RAMP குழுவின் அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதனால் குறித்த வேலையை உரியவாறு பூர்த்தி செய்ய முடியவில்லை. | சேத புனரமைப்பிற்காக வைப்பு பெற்றுக் கொள்ளாத அலுவலரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்வும் பாதையின் புனரமைப்பு நடவடிக்கைகளை ஒப்பந்ததாரர் ஊடாக செய்து கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | பாதை நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது ரூபா 7,258,698 ஆன மேற்பட்ட வேலைகள், ரூபா 13,948,399 ஆன மேலதிக வேலைகள் மற்றும் ரூபா 12,067,706 ஆன விலை அதிகரிப்பிற்காகவும் முறையான அங்கீகாரமின்றி | மேலதிக வேலைகள், மேற்பட்ட வேலைகள் மற்றும் கைவிடப்பட்ட வேலைகளின் (deleted works) தேறிய பெறுமதி (net variation) ரூபா 4,944,744 ஆகும். அதற்கான அங்கீகாரம் கருத்திட்ட பணிப்பாளரினால் 2022.09.14 திகதி வழங்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்த அலுவரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தன. | அவ்வாறே ஒப்பந்த ஒப்படைப்பில் விலை அதிகரிப்பிற்காக ஒப்பந்த பெறுமதியின் 7% சதவீத அளவை ஒதுக்கியிருந்த போதும், நிலவிய நிலைமையின் கீழ் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொண்ட வேலைகளிற்கான முழு விலை அதிகரிப்பு ரூபா 12,067,706 ஆனது. இதற்காக அமைச்சின் மேலதிக செயலாளர் (தொழிநுட்ப மற்றும் பெறுகைகள்) கடிதம் மூலம் அமைச்சின் செயலாளரிடமிருந்து கிடைத்த அங்கீகாரத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டது. | எடுக்க வேண்டும். |
| (v) உடன்படிக்கையின் 7 ஆம் நிபந்தனை பிரகாரம் உடன்படிக்கையில் குறிப்பிடப்படும் உரிய காலத்தினுள் மணல் அகழ்வு செய்வதனை புரக்கனித்தால் அல்லது இயலாது போனால் அது தொடர்பாக முதலாம் தரப்பினரிற்கு ஏற்படும் சேதம் தொடர்பாக ரூபா 300,000 நட்டஈட்டுத் தொகையை முதலாம் தரப்பினரான இலங்கை மஹவெலி அதிகாரசபைக்கு செலுத்தவும் இரண்டாம் தரப்பினரான ஒப்பந்ததாரரி இணங்கியிருந்தார். எனினும் 11 ஒபந்ததாரரிகள் உடன்படிக்கை பிரகாரம் மணல் அகழ்வு செய்ய இயலாதிருந்த போதும் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,300,000 ஆன நட்டஈட்டை அறவிட்டிருக்கவில்லை. | மணல் கருத்திடடத்திற்காக என்னால் அங்கீகாரம் வழங்கப்பட்டு இருந்த போதும் அந்த கருத்திட்டங்களிலிருந்து நட்டஈட்டு அறவிடுவது தொடர்பாக மாதுருஓய தெற்குக் கரை அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு தொடர்பாக அல்லாததுடன் அது தொடர்பாக காணி பயன்பாடு மற்றும் திட்டமிடல் பிரிவு மற்றும் தங்குமிட விவகார முகாமைத்துவ அலுவலகம் -பீ வலயத்தில் பதில் பெற்றுக் கொள்ள வேண்டும். | அறவிட வேண்டிய நட்டஈட்டை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மினிபே இடது கரை மற்றும் தெற்கு கரை கால்வாய் இற்காக நீர் கட்டுப்பாட்டு மற்றும் அறவை வசதிகளுடன் கூடிய மினிபே அணையை உயர்த்தும் ஒப்பந்தத்தை கால நீடிப்பின்றி 02 ஆண்டுகளிற்கு கிட்டிய காலமாக நடாத்திச் சென்றுள்ளதுடன், இக் காலத்தினுள் ஒப்பந்தத்தின் நிர்மாண முன்னேற்றம் 22 சதவீதமானது. இந்த ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 2,912.85 மில்லியன் வரை அதிகரித்து எஞ்விய வேலைகளை ஆரம்ப ஒப்பந்தத்தின் ஊடாக செய்து கொள்ள திருத்திய உடன்படிக்கை இலக்கம் 02 இனை கைச்சாத்திடவும், ஒப்பந்த காலத்தை | ஒப்பந்தத்தின் உடன்படிக்கைகளில் துணைப் பிரிவு சிலவற்றை மாத்திரம் திருத்துவதற்கு ஒப்பந்த உடன்படிக்கையில் திருத்தம் இலக்கம் 02 கைச்சாத்திடப்பட்டது. ஆரம்ப உடன்படிக்கையில் வழங்கியுள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்த தொகை என்பதால் கருப்படுவது வேலைகளை செயற்படுத்துதல் மற்றும் பூரணப்படுத்துதல் மற்றும் ஏதேனும் தவறிற்காக திருத்துவதற்காக ஏற்புக் கடிதத்தில் ஏற்றுக் கொண்ட தொகை எவ்வாறாயுனும், ஒப்பந்த விலை எனும் உப பிரிவு 141 இன் | திருத்திய உடன்படிக்கையின் ஒப்பந்த பெறுமதியை உட்படுத்தாது உடன்படிக்கை கைச்சாத்திட்ட அலுவலரிற்கு எதிராக ஒழுக்காறு நடவடிக்கை எடுக்க வேண்டிதுடன் அதிகரித்திருந்த ஒப்பந்த |

| | | | |
|---|---|---|---|
| | 2023 செப்டம்பர் 21 திகதி வரை அதிகரிக்கவும் 2023 [ூன் 05 திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கைச்சாத்திடப்பட்ட திருத்திய உடன்படிக்கையில் ஒப்பந்த பெறுமதியை உள்ளடக்காது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் அதிகரித்திருந்த ஒப்பந்த பெறுமதியான ரூபா 1,048.05 மில்லியனில் ரூபா 996.10 தொகை விலை விலகல்களானது. | வரைவிலக்கனப்படுத்தி உள்ள விலையாவதுடன் அத் தொகை ஒவ்வொறு திருத்தத்தின் போதும் ஒப்பந்தத்திற்கு இணங்க செய்யப்பட்ட சீராக்கம் ஆவதுடன் அதனை ஆவணப்படுத்தத் தேவையில்லை. | பெறுமதியான ரூபா 1,048.05 மில்லியனில் உள்ளடங்கும் ரூபா 996.10 மில்லியனான விலை விலகலை கணக்கிடல் மற்றும் அதன் சட்ட ரீதியான தன்மையை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டும். |
| (ஆ) | மொரகஹகந்த நீர்த் தேக்கத்தில் இருந்து கி.மீ. 6.225 தூரத்திற்கு நிர்மாணிக்கும் கால்வாயின் நிர்மாண முன்னேற்றம் 64 சதவீதமாக இருக்கையில் ஒப்பந்ததாரரிற்கு ஏற்பட்ட நிதித் தட்டுப்பாட்டின் மீது ஒப்பந்தத்தை தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல முடியாததால் 2021 ஜுலை 13 திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரின் செயலாற்றுகை காப்பினை பணமாக்கி நட்டத்தை அறவிட முயற்சி செய்துள்ளதில் ஒப்பந்ததாரர் தாக்கல் செய்த வழக்கு காரணமாக அந்த தொகையை அறவிட முடியாதுள்ளது.அதன் பிரகாரம் வழங்கிய முற்பண காப்பிலிருந்து ரூபா 185.89 மில்லியனையும் செயலாற்றுகை காப்பினது பெறுமதியான ரூபா 390.51 மில்லியனையும் இதுவரை அறவிட முடியாதுள்ளது. | ஒப்பந்தம் "இரத்து" செய்யப்பட இல்லாததுடன் ஒப்பந்தம் “முடிவுறுத்தல்" (Terminated) செய்யப்பட்டுள்ளது.<br>அது தொடர்பான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் தீர்ப்பு கிடைக்கும் வரை பாரத்திருக்கிறோம். | வழக்கு தீர்ப்பு கிடைத்தவுடன் அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ)<br>(i) | வயம்ப கால்வாயில் நேபடகஙவத்த முதல் மஹகிதுள சுரங்க பிரவேசம் வரை கி.மீ. 17+050 கால்வாய் நிர்மாணிக்கும் வெளிநாட்டு கம்பனியினால் குறித்த் ஒப்பந்தத்தை 2018-2021 காலத்தினுள் பூர்ததி செய்ய வேண்டிய போதும் நிரமாணம் மேற்கொள்ளும் பிரதேசங்களில் காணித் துண்டுகளை சுவீகரித்து காணியின் உரிமையை தீர்த்து ஒப்படைக்க 2½ ஆண்டுகள் காலம் தாமதித்ததால் 2023 திசெம்பர் 05 வரை 04 சந்தர்ப்பங்களில் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. இந்த தாமதம் காரணமாக வெட் வரியுடன் ரூபா 7,226.62 மில்லியனிற்கு வழங்கியருந்த ஒப்பந்தம் ரூபா 15,154.74 | மேற்குறித்த காணித் துண்டுகளை சுவீகரித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், நிர்மாண பணிகள் அதன் பின்னர் செய்யப்பட்டிருந்தது.<br>ஏற்றுக் கொள்கிறேன்.<br>விலை விலகல்களை செலுத்துவதற்காக ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனை பிரகாரம் FIDIC சமன்பாடு பயன்படுத்தப்படுவதுடன், CIDA நிறுவனத்தின் மூலம் மாதாந்தம் வெளியிடப்படும் விலை சுட்டிகள் இதற்காக பயன்படுத்தப்படுகிறது. | காணி சுவீகரித்தல், கருத்திட்ட நிர்மாண திட்டம் மற்றும் விலை விலகலை கணக்கிடல் மீண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் வரை ரூபா 7,928.12 மில்லியனினால் அதாவது, 110 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டிலிருந்து ஏற்பட்ட பொருளாதார மற்றும் நிதி வீழ்ச்சி காரணமாக நிர்மாண பொருட்களின் கிரயம் உயர்வடைந்த காரணமாக குறிப்பிட்டு ஒதுக்கியிருந்த ரூபா 162 ஆன விலை விலகல் ரூபா 5,827.7 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | | |
| (ii) | ஒப்பந்த மேலதிக வேலைகள் மற்றும் அளவுகள் மாற்றமடைவதற்காக மற்றும் அளவுகள் மாற்றமடைவதற்காக ரூபா 540 மில்லியன் ஒதுக்கியிருந்த போதும் அது ரூபா 2,024.9 மில்லியன் வரை ரூபா 1,484.9 இனால் அதிகரித்திருந்தது. அங்கு 13 மீற்றர் அகலத்திற்கு திறந்ததாக தயாரிக்க திட்டமிட்டிருந்த கால்வாய் பின்னர் மதியுரை கம்பனியினால் 10 மீற்றர் அகலத்திற்கு 02 கால்வாய்களாக மூடிய கொன்கிரீட் இட்டு தயாரிக்க தீர்மானித்து அதன் பிரகாரம் திட்டம் மாற்றப்பட்டதன் காரணமாக 45,425 கன மீற்றர் கொன்கிரீட் மேலதிகமாக இட நேர்ந்ததால் ரூபா 1,245.54 மில்லியன் மேலதிகமாக செலவிட நேரிட்டிருந்தது. இங்கு மதியுரை கம்பனியின் நிர்மாண திட்டமிடல் சவாலிற்கு உட்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 05 வரை மாத்திரம் ஒப்பந்த காலத்தை நீடித்திருந்த போதும், 2023 திசெம்பர் 31 திகதிவரை ஒப்பந்தத்தை பூர்த்தி செய்திருக்காததுடன் அத் திகதியன்று நிர்மாண முன்னேற்றம் 91.4 சதவீதமாகும். | மேலதிக காணி சுவீகரிப்பு செயன்முறையின் மேலும் தாமதத்தை தவிர்த்துக் கொள்ள மற்றும் ஏற்பட முடியுமான சாதாரண பொது மக்கள் அமைதியின்மையை தவிர்த்துக் கொள்வதற்காக, திட்டமிடல் பிரமாணங்களை மாற்ற நேரிட்டது. ஒப்பந்ததாரர் 2023 செப்டம்பர் மாதம் முதல் 2023 திசெம்பர் மாதம் வரை சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்படுவதுடன், அதன் பிரகாம் 2024 மே 17 வரை ஒப்பந்த காலத்தை நீடிக்க உரிமை பெறப்பட்டுள்ளது. | இங்கு திட்டமிடலை வடிவமைத்த மதியுரை கம்பனியின் வடிவமைப்பு திட்டத்தை மீண்டும் மீளாய்வு மற்றும் செலுத்த வேண்டிய கட்டணத்தை பரீட்சித்து செலுத்த வேண்டும். ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்து அதன் நலன்களை பொது மக்களிற்கு பெற்றுக் கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | இந்த ஒப்பந்தத்தின் கீழ் நீர்பாசன திணைக்களத்திற்குரிய தேவஹுவ பொறியியல் அலுவலக திருத்தம் மற்றும் நவீனமயமாக்களிற்கு ரூபா 10 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதனை மேற்கொள்ளாது அந் நிதியால் ரூபா 9.6 மில்லியன் செலவிட்டு கருத்திட்ட மதியுரை கம்பனிக்கு இரண்டு மாடி கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. | எவ்வாறாயினும், ஒப்பந்தத்தின் ஆரம்ப கட்டத்தில் தேவஹுவ நீர்பாசன திணைக்கள கட்டிட புனரமைப்பு செய்வதற்காக பரீட்சித்ததுடன், அதனை திருத்தம் செய்ய முடியுமான நிலையில் இருக்காததால், மிகவும் குருகிய காலத்தில் தெரிவு செய்த மாற்றீடாவது கருத்திட்டத்திற்காக மிகவும் மத்தியில் அமைந்துள்ள கட்டிடமொன்றை வாடகையிற்கு பெறுதல் மற்றும் அங்கு தங்குமிட பொறியியல் அலுவலகத்தை நிறுவுவதாகும். | ஆரம்ப திட்டத்திற்கு மாற்றமாக செயற்பட்ட அலுவலரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஈ) மஹவெலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்சித் திட்டத்திற்கான மதியுரை சேவைகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | நிகழ்சித் திட்டத்தை தயார் செய்யும் தொழிநுட்ப உதவிக்காக (PPTA) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் பின்னர் இந்த நிகழ்சித் திட்டத்தின் மதியுரை கம்பனியில் கடமைக்கு இணைந்து கருத்திட்ட குழுத் தலைவர் மற்றும் பிரதான திட்டமிடல் பொறியியலாளராக 07 ஆண்டு காலம் சேவையாற்றியுள்ளார். அதற்காக மாதாந்தம் 26,000 யூரோ (ரூபா 8.5 மில்லியன்) சம்பளம் செலுத்தியதுடன், 2023 ஜுன் வரை ரூபா 702.18 மில்லியன் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கிக்காக நிகழ்சித் திட்டங்களை ஆயத்தம் செய்யும் பல பணிகளிற்கு உதவி செய்த நபரொருவர் நிகழ்சித் திட்டத்தின் மதியுரை கம்பனியில் கடமையாற்றுவதில் நிகழ்சித் திட்ட பாதுகாப்பின் சுயாதீனம் சவாலிற்கு உட்பட்டிருந்தது. இந்த மதியுரையாளரின் சேவையை பெற்றுக் கொள்வது ஆசிய அபிவிருத்தி வங்கி 2013 ஆண்டில் வெளியிட்ட மதியுரையாளர்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கான கைநூலின் 1.11 பந்திக்கு முரணானதாகும். | மஹவெலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்சித் திட்டத்திற்காக ஆயத்தப்படுத்தும் தொழிநுட்ப உதவியை (PPTA) தயாரிக்க ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு வழங்கி அக் குழுவினால் குறித்த அறிக்கை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மதியுரை சேவையை பெற்றுக் கொள்வதற்காக தனியான பெறுகைகள் செயற்முறை நீர்பாசன அமைச்சு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் மேற்கொண்டு அந்த சேவையை நிறுவி கொடுப்பனவு மதியுரை ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க செய்யப்படும். | ஆசிய அபிவிருத்தி வங்கிக்காக நிகழ்சித் திட்டங்களை ஆயத்தம் செய்யும் பல பணிகளுடன் தொடர்புபட்ட நபரொருவரை மதியுரை கம்பனியில் கடமையாற்றும் கம்பனியொன்றிடம் மதியுரை சேவையை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை செய்த அலுவலர் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மேற்கொள்ள உத்தேசித்த நிர்மாண ஒப்பந்தங்களின் விடயப் பரப்பு (Define the scope output and the length of the services) ஒப்பந்தங்களின் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்க முடியுமாகையால் அதன் மீது மதியுரை கட்டணம் செலுத்த வேண்டிய போதும், காலத்தை அடிப்படையாக்க கொண்டு மதியுரை கட்டணம் செலுத்துவதற்காக 2015 நவம்பர் 16 முதல் 60 மாத காலத்திற்கு 22.09 மில்லியன் அமெ.டொலர் பெறுமதிக்கு மதியுரை ஒப்பந்த உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்தது. கருத்திட்ட நிர்மாண நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கருத்திட்ட காலம் நீடித்திருந்ததால் இந்த நீடிப்புக் காலத்தை அடிப்படையாக் கொண்டு மதியுரை கட்டணமும் செலுத்த நேரிடுவதால் 2024 ஜுன் 30 வரை 06 | இந்த மதியுரை ஒப்பந்த உடன்படிக்கையில், பணிகளின் மீது தங்கிவாழ் ஒரே தடவை படிகள் (Lump sum Payment) கால அடிப்படையிலான படிகளாக (Time Base Payment) மதியுரையாளர்கள் இடமிருந்து தேவையான சேவையின் தன்மை பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுகிறது.<br>கால அடிப்படையிலான சேவைகள் தெளிவாக ஒப்பந்த நிர்மாண மேற்பார்வைக்கு ஆவதுடன் "ஒப்பந்தத்தை பூரணப்படுத்தும் காலம்" பிரகாரம் மாற்றமடைவதால் எதிர்காலத்தில் ஒப்பந்தம் முடியும் வரை நீடிக்க நேரிடுகிறது.<br>மதியுரை சேவைக்காக ஒதுக்கிய ஆரம்ப ஏற்பாடு 22.09 மில்லியன் டொலர் ஆனது முதலாவது கடன் | செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு மதியுரை கட்டணம் செலுத்த வேண்டிய போதும் கால அடிப்படையில் மதியரை கட்டணம் செலுத்திய தொடர்பாக மதியுரை சேவை ஒப்பந்த உடன்படிக்கையை மீள் பரிசீலனை செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் ஒப்பந்த காலத்தை நீடித்து கிரயம் 41.56 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கட்டம் 01 மற்றும் 02 இற்காக மதியுரை கட்டணம் செலுத்த ஒதுக்கியிருந்தது 25.93 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகையால், ஏனைய செலவுகளிற்கு ஒதுக்கிய நிதியிலிருந்து அதிகரித்த மதியுரை கட்டணத்தை செலுத்த நேரிட்டிருந்தது. அவ்வாறே கருத்திட்ட ஆரம்பத்திலேயே 34 வெளிநாட்டவர்கள் மதியுரை நடவடிக்கைகளிற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், தற்போது 08 வெளிநாட்டவர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். வெளிநாட்டவர் ஒருவரிற்கு மாதத்திற்கு 16,000 யூரோ முதல் 26,000 யூரோ (ரூபா 5.5 மில்லியன் முதல் 9 மில்லியன்) வரையான வீச்சளவில் சம்பளமும், 110 யூரோ முதல் 70 யூரோ இடையிலான வீச்சளவில் நாளாந்த தங்கிவாழ் படிகளும் செலுத்தப்பட்டு வருகின்றன. இந்த வெளிநாட்டவர்களிற்கு 2023 ஜுன் 30 திகதி வரை யூரோ 12,843,998 (ரூபா 4,341 மில்லியன்) ஆன சம்பளமும் 1,068,599 யூரோக்களான (ரூபா 361.18 மில்லியன்) தங்கிவாழ் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன. | தவணை மற்றும் 60 மாத காலத்திற்கு மாத்திரமே. கடன் தவணை 2 இன் பணிகளிற்கான திருத்தம் மற்றும் சில மாற்றங்கள், விடயப் பரப்பை மாற்றுதல் மற்றும் செயற்படுத்தும் காலத்தினுள் ஒரு சில மாற்றங்கள் உள்ளடங்களாக அங்கீகரிக்கப்பட்டன. கொடுப்பனவு மதியுரை ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க செய்யப்படும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | கருத்திட்ட செயற்பாடுகளிற்காக வெளிநாட்டு மதியுரை கம்பனியினால் அதனுடன் இணைந்த 02 உள்நாட்டு கம்பனிகள் ஊடாக 161 உள்நாட்டு ஊழியர்களை ஆட்சேர்த்திருந்ததுடன், தற்போது அவற்றில் 110 பேர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளனர். இந்த ஆளணியினரிற்கு மேலதிகமாக கொழும்பு கருத்திட்ட அலுவலகத்தில் மற்றும் ஒப்பந்தம் செயற்படுத்தப்படும் பிரதேசங்களில் அமைந்துள்ள 08 வேலைத் தள அலுவலகங்களில் சேவையாற்றும் 48 ஆளணியினரிற்கும் கால அடிப்படையில் மதியுரை கட்டணம் செலுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறே கருத்திட்டத்திற்கு சொந்தமான 14 வாகனங்கள், 03 மோட்டார் சைக்கில்கள் மதியுரை கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் 2023 ஜுன் 30 திகதி வரை அவற்றின் இயக்க மற்றும் பராமரிப்பிற்காக ரூபா 67 மில்லியனான செலவு கருத்திட்டத்தினால் செய்யப்பட்டிருந்தது. இந்த மதியுரை | ஏற்றுக் கொள்கிறேன். 2023 ஜுன் வரை கொழும்பு அலுவலக ஆளணி அங்கத்தவர்கள் 34 பேர்களிற்கும் வேலைத்தள ஆளணி அங்கத்தவர்கள் 117 பேர்களிற்கும் கால அடிப்படையில் ஒப்பந்த நிபந்தனை பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | மதியுரை சேவை ஒப்பந்த உடன்படிக்கையை மீள் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனி பயன்படுத்தும் பிரதான அலுவலகத்தை நவீனமயமாக்க ரூபா 9.65 மில்லியன், பல்வேறு இடங்களில் நடாத்திச் செல்லும் மதியுரை கம்பனிக்கு சொந்தமான அலுவலகங்களை அமைப்பதற்கு ரூபா 13.47 மில்லியன், அவற்றை பராமரிக்க ரூபா 84.83 மில்லினும் 2023 ஜுன் 30 திகதி வரை செலவிடப்பட்டிருந்தது. | | |
| (உ) | ஆசிய அபிவிருத்தி வங்கி 2013 ஆண்டு வெளியிட்ட, வங்கி மற்றும் அதன் கடன்தாரர்களினால் மதியுரையாளர்களை ஈடுபடுத்தும் வழிகாட்டல் கைநூலின் 1.11(b) மற்றும் (c) பந்தி பிரகாரம் மதியுரை ஒப்பந்தத்திற்காக தெரிவு செய்யும் கம்பனி அல்லது கம்பனிகள் குறித்த கருத்திட்டம் தொடர்பாக தனியான ஒப்பந்தம் (உதா:- வடிவமைப்பு திட்டம் தயாரித்தல், சுற்றாடல் மதிப்பீடு) முன்னர் செய்திருப்பின் மதியுரை நடவடிக்கைகளிற்கு அந்த கம்பனியை மீண்டும் நியமிக்கக் கூடாததுடன், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் பெறும் (நீர்பாசன அமைச்சு) நிறுவனங்களின் ஊழியர்களுடன் குடும்பம் மற்றும் வியாபார தொடர்புகள் உள்ள நபர்களையும் மதியுரை நடவடிக்கைகளிற்கு பங்களிப்புச் செய்து கொள்ளக் கூடாது. அவ்வாறாயினும், இந்த நிகழ்சித் திட்டத்தின் வடமத்திய மற்றும் வடமேல் கால்வாய்கள் நிர்மாணித்தல் மற்றும் மினிபே கால்வாய் புனரமைப்பு கருத்திட்டங்களில் வடிவமைப்பு திட்டம், சுற்றாடல் மதிப்பீடு அறிக்கை, சாத்தியப்பாட்டு ஆய்வறிக்கை மற்றும் நவீனமாயமாக்கல் அறிக்கை தயாரிக்கப்பட்டு அதற்காக ரூபா 102.98 மில்லியன் தொகை மஹவெலி மதியுரை பணியக கம்பனி ஊடாக பெற்றுக் கொண்ட கம்பனி பின்னர் நிகழ்சித் திட்டத்தின் பிரதான மதியுரை கம்பனியின் இலங்கை முகவர் கம்பனியாக 2015 ஆண்டு முதல் செயற்படுகின்றது. மேலும் இந்த முகவர் கம்பனியின் பிரதான ஆளணி கடன் பெறுனரான நீர்பாசன அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் ஓய்வுபெற்ற அலுவலர்களுடன் கூடியதாகும். | இவ் இரண்டு ஒப்படைப்புகளும் இரண்டு காலப் பகுதிகளில் செய்யப்பட்டுள்ளன, அதனால் பரஸ்வரம் வெவ்வேறாக கருதப்படும். மதியுரையாளர்களை தெரிவு செய்வது நீர்பாசன அமைச்சு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் செய்யப்பட்டுள்ளது. | மதியுரை சேவை ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் அதன் ஆளணியினர் உள்ளடக்கத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) (i) | மஹகிதுள சுரங்கப் பாதை, மஹகிதுள மற்றும் மஹகிருள 02 நீர்த் தேக்கங்கள் மற்றும அந்த நீர்தேக்கங்களிற்கு இடையிலாள கால்வாய் அமைக்கும் ஒப்பந்தம் 2020 – 2024 கலத்தினுள் ரூபா 9,978.48 மில்லியன் பெறுமதிக்கு நிர்மாணிக்க பொறுப்பேற்ற கம்பனிக்கு நிர்மாணப் பணிகளிற்காக பொறுத்தமான ஆளணியினர் மற்றும் உபகரணங்கள் இல்லாமை, பலவீனமான வேலைத் தள முகாமைத்துவம் ஆகிய காரணங்களால் ுதிட்ட பிரகாரம் நிர்மாண முன்னேற்றத்தை பேணிச் செல்ல இயலாதிருந்தது. அதன் காரணமாக ஒப்பந்தத்தை 2023 மே 26 திகதி முடிவுறுத்தி இருந்ததுடன் அது வரை நிர்மாண முன்னேற்றம் 2.97 சதவீதத்தை மாத்திரம் அறிக்கையிட்டிருந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்தி இருந்த போதும் மஹகிதுள மற்றும் மஹகிருள நீர்த் தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் அதற்கிடையில் அமைந்துள்ள மஹதம்பே நீர்த் தேக்க மேம்படுத்தலிற்காக 778 ஏக்கரான காட்டுப் பிரதேசத்தில் அமைந்துள் 47,552 மரங்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் வெட்டி அகற்றப்பட்டிருந்ததுடன், அவ்வாறே மஹகிதுள நீர்தேக்க குளக் கட்டை அமைப்பதற்காக அத்திவாரம் வெட்டி மண் நிரப்பி குறித்த குளக் கட்டின் 1.5 சதவீத வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதற்காக ரூபா 58.2 மில்லியன் செலவும், நிர்மாண மேற்பார்வைக்காக மதியுரை கம்பனியின் ஆளணியிளர் சம்பளம், அலுவலக செலவுகள் மற்றும் வாகன பராமரிப்பிற்காக ரூபா 139 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.<br><br>இந்த நிர்மாணத்திகு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரி யான் ஓய கருத்திட்டத்தினதும் நிர்மாணங்களை செய்திருந்ததுடன, அக் கருத்திட்டத்திற்காக வரிச் சலுகையுடன் கொண்டுவரப்பட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும் 143 வாகனங்களிற்காக செலுத்த வேண்டிய சுங்க வரியை செலுத்தி இக் கருத்திட்டத்திற்காக பயன்படுத்த 2021 ஆகஸ்ட் 30 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை இரத்துச் செய்ததால் இந்த இயந்திர உபகரணங்களை ஒப்பந்ததாரர் அகற்றிக் கொண்டு சென்றிருந்தார். | ஏற்றுக் கொள்கிறேன்.<br>இந்த ஒப்பந்தம் "முடிவுறுத்தப் பட்டிருந்தது.<br>சுங்கப் பணிப்பாளர் - மத்திய புலனாய்வு பணிப்பாளர் அலுவலகத்தின் 2023.10.06 திகதிய Ref: CIB/2020/00 177/CCR/014 கடிதம் பிரகாரம், ஒப்பந்ததாரரினால் அரசிற்கு செலுத்த வேண்டிய உரிய வரி மற்றும் ஏனைய அறவீடுகள் செலுத்தப்பட்டுள்ளன. | செயலாற்றுகை பிணைமுறி மற்றும் முற்பண பிணைமுறியை பணமாக்கி அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஒப்பந்தத்தை இரத்துச் செய்த பின்னர் ஒப்பந்ததாரர் மற்றும் மதியுரை கம்பனியின் பாவனைக்கு அமானோ தகரம் பயன்படுத்தி நிர்மாணித்த 02 தற்காலிக கட்டிடங்கள் மற்றும் மதியுரை கம்பனியினால் பயன்படுத்திய சிற்றுண்டிச் சாலை கருத்திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பொறுப்பேற்ற கட்டிடங்களை சுயாதீன குழுவொன்றை ஈடுபடுத்தி மதிப்பீடு செய்து பொறுப்பேற்றிருக்காத உடன, பொறுப்பேற்ற கட்டிடங்கள் 2023 செப்டம்பர் 01 திகதி முதல் 06 மாதங்களிற்கு பாதுகாக்க பாதுகாப்பு கம்பனியொன்றின் சேவையை பெற்றுக் கொள் ரூபா 3.57 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்த ஏற்பாடுகள் பிரகாரம் (வேலை உருப்படிகளின் BOQ விபரம் 1.2.1), Demobilization சந்தர்ப்பத்தில் ஒப்பந்ததாரரினால் தற்காலிக வசதிகளுடன் அனைத்து தற்காலிக நிர்மாணங்களையும் மாற்ற வேண்டும் ஒப்பந்ததாரரிடம் இருந்து பொறுப்பேற்ற கட்டிடங்களை (Main Camp) பாதுகாத்துக் கொள்ள பாதுகாப்பு கம்பனியொன்றின் சேவையை பெற்றுக் கொண்டதுடன், அதற்காக செலவாகும் தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிட (Claim) நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்பேற்ற சொத்துக்களை மதிப்பீடு செய்து பொறுப்பேற்றல் மற்றும் அவற்றை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கிடையே, நிகழ்சித் திட்டத்தின் 03 கட்டத்திற்காக கடன் உடன்படிக்கை கைச்சாத்திட 2024 மே 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2019 – 2023 காலத்தினுள் பூர்த்தி செய்ய வேண்டிய வடமேல் கால்வாய் கருத்திட்டத்தின் பிரதான 03 ஒப்பந்தங்கள் தற்போது ஆரம்பிக்க ஏனும் முடியாதிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன்.<br>ADB நிதியீட்டல் அல்லது வேறு மாற்று நிதியீட்டல் இல்லாத காரணத்தால் எஞ்சிய வேலைகளை மீண்டும் ஒப்படைத்தலை தற்போது செய்ய முடியாது. | திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த நிருவாகம் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2024 இரண்டாம் காலாண்டின் கட்டம் 03 இற்காக வழங்க உத்தேசித்துள்ள அமெ. டொலர் 93 மில்லியனான நிதியை ஈடுபடுத்தி வடமத்திய மாகாண கால்வாயின் சுரங்க துளை இயந்திரம் 02 இனை பயன்படுத்தி மேற்கொள்ளும் நிர்மாண ஒப்பந்தம், மஹவெலி வலயங்களில் விவசாயிகளிற்கு விவசாய உள்ளீடுகளை வழங்குதல் மற்றும் இயக்க செலவுகளை செய்ய மாத்திரம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இந்த நிகழ்சித் திட்ட எஞ்விய வேலைப் பகுதிகளை பூர்த்தி செய்து காலப் பகுதிகளை தீர்மானித்து அல்லது அதற்கு தேவையான நிதியை பெற்றுக் கொள்வது தொடர்பாக திட்டவட்டமான திட்டமொன்றை தயாரிக்காததால் இலங்கை மக்களிற்கு எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | குருங்கால நலன்களை கலந்துரையாட இலங்கை அரசு ஆரம்ப முயற்சியாக ரூபா 2000 மில்லியன் ஒதுக்கியுள்ளது. நீண்ட கால மூலோபாயமாக அபிவிருத்தி பங்குதாரர்களுடன் நிதிப் பாய்ச்சலை பாதுகாப்பதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. | கருத்திட்ட எஞ்விய வேலைகளை பூர்த்தி செய்ய கால எல்லைகளை தீர்மானித்து அதன் பிரகாரம் நிதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மஹவெலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்சித் திட்டம் கட்டம 02 இன் கீழ் வடமத்திய மாகாண கால்வாயின் கோந்துருவாவ இலிருந்து நாமல்புர வரை கி.மீ. 27.7 நீளமான சுரங்க கால்வாய் நிர்மாணித்தல். | | |
| (i) | மின்னேரிய – கிரிதளே இயற்கை காப்பொதுக்கம், சீகிரிய சரணாலயம், மின்னேரிய தேசிய பூங்கா மற்றும் ஹுருளு குள காப்பொதுக்கத்தினுள் கால்வாய் நிர்மாணத்தல் நிலத்தின் கீழால் மாத்திரம் Cut & Cover, double Conduit அல்லது tunnel ஆகிய முறையை பயன்படுத்தி நிர்மாணிக்குமாறு வன சீவராசிகன் பாதுகாப்பு திணைக்களத்தினால் அறவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும் இங்கு தொழிநுட் ரீதியாக தகுதியான, தேசிய ரீதியாக ஆக்கபூர்வமான, சுற்றாடல் ரீதியாக குறைந்தபட்ச தாக்கம் செலுத்தும் முறைமையாக அதிக கிரயம் கொண்ட முறைமையான 02 சுரங்க அகழ்வு இயற்திரங்களை பயன்படுத்தி அகழும் முறை தெரிவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | தொழிநுட் ரீதியாக தகுதியான, தேசிய ரீதியாக ஆக்கபூர்வமான, சுற்றாடல் ரீதியாக குறைந்தபட்ச தாக்கம் செலுத்தும் மற்றும் கிரயம் குறைந்தபட்ச அகழ்வு செய்யும் முறைமையை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | அகழ்வு செய்யத் தேவைான 1 ஆவது சுரங்க அகழ்வு இயந்திரத்தை சீனாவிலிருந்து இறக்குமதி செய்து வேலைத் தளத்திற்கு போக்குவரத்தி பொருத்த ரூபா 6,690.97 மில்லின் ஏற்றுக் கொண்ட முழுத் தொகையையும் ஒப்பந்ததாரரிற்கு செலுத்திய போதும் சுரங்க அகழ்வு இயந்திரம் திருகோனமலை துறைமுகத்திலிருந்து வெளியில் வரும் சந்தர்ப்பம் வரை அதன் கிரயம் ரூபா 2,155.97 மில்லியனாக இருந்தது. அதன் படி திருகோனமலை இலிருந்து நாமல்புர வரை இயற்திரத்தை போக்க வரத்து செய்து பொருத்துதல் மற்றும் ஒப்பந்ததாரரின் இலாபத்திற்காக ரூபா 4,535 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்தத்திற்காக பொருத்மான ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்யும் போது போட்டி விலைமனு பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. | விலைமனு மதிப்பீட்டின் போது வினைத்திறன் மற்றும் கிரயம் குறைந்தபட்ச ஒப்பந்த முறைமையை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்த நிருவாகம் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டை வலுப்பெறச் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஒப்பந்தத்தை வழங்க 2½ ஆண்டுகள் தாமதித்ததால் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யும் காலம் 2027 மார்ச் 10 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2025 ஜுன் மாதம் ஒப்பந்தத்தை நிறைவு செய்ய Drill & Blasting முறையின் கீழ் நிர்மாணிக்க இருந்த 10.4 கி.மீ. தூரத்தை நிர்மாணிப்பதற்காக இரண்டாம் சுரங்க அகழ்வு இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன்.<br><br>இவ் ஒப்பந்தத்தின் கால நீடிப்பின் கீழ் செய்யப்படவில்லை. ஒரு TBM இயந்திரத்துடன் ஆரம்ப ஒப்பந்தத்தின் ஒப்பந்த காலம் 2,191 நாட்களாகும். (வேலை நிறைவு செய்யும் திகதி 2027 மார்ச் 10) | ஒப்பந்த நிருவாகம் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டை வலுப்பெறச் செய்ய வேண்டும். |
| (iv) | மதியுரை கம்பனியினால் சுரங்க அகழ்வு இயந்திரத்தை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், வேலைத் தளத்திற்கு போக்கு வரத்து செய்து பொருத்துவதற்காக ரூபா 7,255.40 மில்லியன் மதிப்பிடப்பட்டு இருந்ததுடன் ஒப்பந்ததாரரினால் அதற்காக ரூபா 6,690.97 மில்லினான விலை சமர்பிக்கப்பட்டிருந்தது. இந்த 2 இயற்திரங்களையும் இறக்குமதி செய்யும் போது கருத்திட்டதிற்கு சமர்ப்பித்திருந்த 2 பட்டியல் பத்திரங்கள் பிரகாரம் அந்த 02 இயந்திரங்களின் CIF பெறுமதி முறையே அமெ.டொ. 10,581,673 (ரூபா மில்லியன் 2,147.97) மற்றும் அமெ.டொ. 9,476,342 ((ரூபா மில்லியன் 3,523.61) அதாவது கூட்டுப் பெறுமதி ரூபா 5,671.58 மில்லின் ஆகும். அதன் பிரகாரம் பதியுரை கம்பனியினால் ஒப்படை பத்திரம் தயாரிக்கும் போது இவ்வாறான இயந்திரமொன்றின் பெறுமதி பற்றி உறுதிப்பாடொன்றை பெற்றுக் கொள்ளாது இந்த உருப்படிக்காக மிகை மதிப்பீடு தயாரித்திருந்தது. | TBM இயந்திரத்திற்கு ஒப்பந்ததாரரினால் முன்வைக்கப்பட்ட விலைகளின் பெறுமதி ரூபா 6,690.97 மில்லியன் என சரி செய்யப்பட வேண்டும். மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் CIF பெறுமானத்தை ஒன்றுக் கொன்று ஒப்பிட முடியாது. | மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மதியுரையாளர்களை தெரிவு செய்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டை வலுப்பெறச் செய்ய வேண்டும். |
| (v) | 2 ஆவது சுரங்க அகழ்வு இயந்திரத்தை ஈடுபடுத்துவதற்காக பொது நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தொழிநட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைக்காததுடன் அமைச்சின் செயலாளரினால் விசேட தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இக் குழுவினால் உத்தேசத்தின் சாத்தியப்பாடு சந்தேகத்திற்கு இடமானது எனவும் ஒப்பந்தத்திற்காக மேலதிக நிதியை முதலீடு செய்வதனை நியாயப்படுத்த முடியாதென பரிந்துரை முன்வைத்திருக்கும் போது அக்குழுவின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மீண்டும் நியமிக்கப்பட்ட விசேட | ஏற்றுக் கொள்கிறேன். | மேலதிக நிதியை முதலீடு செய்வதனை நியாயப்படுத்த முடியாதெனும் குழுவின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காது அமைச்சரவைக்கு போலியான தகவல்களை வழங்கிய அலுவலர்களிற்கு எதிராக ஒழுக்காற்று |

| | | | |
|---|---|---|---|
| | தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் மூலம் 2 ஆவது சுரங்க அகழ்வு இயந்திரத்தை ஈடுபடுத்த பரிந்துரை பெறப்பட்டிருந்தது. அங்கு 2 குழுக்கள் கொள்வனவு செய்வதனை நிராகரித்துள்ளதனை அமைச்சரவைக்கு அறித்தியிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | 02 ஆவது சுரங்க அகழ்வு இயந்திரத்தை சீனாவிலிருந்து இறக்குமதி செய்து வேலைத் தளத்திற்கு போக்குவரத்து செய்து பொருத்துவதற்காக ரூபா 6,690.97 மில்லியனான முழுத் தொகையையும் ஒப்பந்ததாரிற்கு செலுத்த இணங்கி 2024 மார்ச் 15 திகதி வரை அவற்றில், ரூபா 6,021.87 செலுத்தப்பட்டிருந்தது. சுரங்க அகழ்வு இயந்திரத்தை திருகோனமலை துறைமுகத்திலிருந்து வெளியில் வரும் சந்தர்ப்பம் வரை அதன் கிரயம் ரூபா 3,635.61 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம், திருகோனமலையிலிருந்து கோந்துருவாவ வரை இயற்திரத்தை போக்கவரத்து செய்து பொருத்துவதற்காக ரூபா 3,055.36 மில்லியன் தொகை செலுத்தியிருந்தமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. 2022 நவம்பர் 22 இறக்குமதி செய்யப்பட்ட 2 ஆவது சுரங்க அகழ்வு இயந்திரம் 2023 மார்ச் முதல் 2024 மார்ச் வரை தற்காலிகமாக செயற்படுத்தாதிருக்க அமைச்சரவை தீர்மானித்திருந்தது. இயந்திரத்தை பொருத்திய பின்னர் 2023 மார்ச் முதல் 8 மாதங்களாக விளைவற்று இருந்து 2023 நவம்பர் 23 இலிருந்து செயற்படுத்த ஆரம்பித்திருந்ததுடன், அத்திகதி முதல் 2024 பெப்ரவரி 29 திகதி வரை 3 மாத காலத்திற்கு முன்னேற்றம் மீற்றர் 399.91 ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | TBM இயந்திரத்திற்கு ஒப்பந்ததாரரினால் முன்வைக்கப்பட்ட விலைகளின் பெறுமதி ரூபா 6,690.97 மில்லியன் என சரி செய்யப்பட வேண்டும். மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் CIF பெறுமானத்தை ஒன்றுக் கொன்று ஒப்பிட முடியாது. | நிர்மாண மதிப்பீடு தயாரிக்கும் போது அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vii) | ஒப்பந்த நிறைவில் 2 அகழ்வு இயந்திரங்களையும் கலற்றி துறைமுகம் வரை போக்குவரத்து செய்வதற்காக ரூபா 179.99 மில்லியன் மதிப்பீட்ட பத்திரத்திற்கு உட்படுத்தியிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 13,381.94 மில்லியன் பெறுமதியான 2 இயந்திரங்களிற்காக செலவிட்ட கிரயத்தின் ஒரு பகுதியை அல்லது தொகையை மதிப்பிட்டு மீள் பெற்றுக் கொள்ள உடன்படிக்கை மூலம் இணங்கி இருக்காததுடன் 2 இயந்திரங்களும் எவ்வித அறவீடும் இன்றி | இந்த அனைத்து செயற்பாடுகளும் விலைமனு ஆவணங்களில் சேவை வழங்குனரின் தேவையின் கீழ் குறிப்பிட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் மனுதாரர் அவர்களின் விலைமனுவை சமர்பித்துள்ளார். | நிர்மாண மதிப்பீடு தயாரித்தல் மற்றும் ஒப்பந்த நிருவாகம் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டை வலுப்பெறச் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந்நாட்டிலிருந்து எடுத்துச் செல்ல இணங்கியிருந்தது. | | |
| (viii) | சுரங்கப் பாதையில் பலவீனமான பாறைகள் உள்ள இடத்திற்கு கொங்கிரீட் வலையல் (Ring) இடுவதற்காக அந்த வலையல் தயாரிக்கும் தொழற்சாலை மற்றும் களஞ்சியத்தை நிர்மாணிக்க முறையே ரூபா 928.72 மில்லியன் மற்றும் ரூபா 149.82 மில்லியனும் மேலும் அந்த வலையல் தயாரிப்பதற்காக ரூபா 2,892.3 மில்லியனும் ஆகுமாறு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்து 2024 சனவரி 31 திகதி வரை சுரங்கப் பாதையில் பொருத்திய கொங்கிரீட் வலையல் 2,967 இல 1,298 வலையல்கள் அதாவது 44 சதவீதம் பல இடங்களில் வெடித்திருந்தாக இணங்கானப்பட்டிருந்தன. | இங்கு குறிப்பிட்டுள்ள பெறுமானங்கள் BOQ உருப்படியுடன் அல்லது இனங்கண்ட வெடிப்புகள் தொடர்பான அறிக்கையுடன் சரியாக இணங்காத போதும் அந்த சம்பவம் உண்மையாக இடம்பெற்றதாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொண்ட தரத்தின் பிரகாரம் பொறியியலாளர் மற்றும் ஒப்பந்ததாரரின் நிபுணர்கள் இதற்காக காரணம் மற்றும் சரிசெய்யும் முறையை இனங்காண ஈடுபட்டுள்ளனர். சேவை பெறுனரும் இடம்பெற்று வரும் தீர்வு செயன்முறை பற்றி அதிக கவனம் செலுத்தியுளளனர். | சேதமடைந்த கொங்கிரீட் வலையல்களை மீண்டும் தயாரித்துக் கொள்ள வேண்டும். |
| (ix) | வடமத்திய மாகாண கால்வாய் நிர்மாணத்தின் ஊடாக மஹகனதராவ நீர்தேக்கத்திற்கு பெற்றுக் கொள்ளும் நீரினனால் றபேவ, மதவச்சி பிரதேசங்களிற்கு குடிநீர் வழங்க ரூபா மில்லியன் 11,515 மதிப்பீட்டு ஏற்பாட்டின் கீழ் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் உதவியால் அநுராதபுர வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டத்தை ஆரம்பித்து அதன் வேலைப் பணிகள் நிறைவடைய அன்மித்துள்ள போதும், வடமத்திய மாகாண கால்வாய் கருத்திட்டத்தை உரிய காலத்தில் செயற்படுத்தாததால் அக் கருத்திட்டத்தின் நீர் மஹகனதராவ நீர்தேக்கத்திற்கு கிடைக்கும் வரை இந்த குடிநீர் கருத்திட்டத்தை செயற்படுத்த முடியாத மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே வடமத்திய மாகாண கால்வாய் நிர்மாணத்திற்கு சுவீகரித்த காணிக்காக நட்டஈடு செலுத்தியிருந்ததுடன் மேலும், 259 காணித் துண்டுகள் அதாவது மொத்த அளவில் 40 சதவீதம் சுவீகரிக்க வேண்டியதாக இருந்தன. மேலும், நட்டஈடு செலுத்தப்பட்ட 385 காணித் துண்டுகளின் உடமையை காணி உரிமையாளர்கள் இடமிருந்து பொறுப்பேற்று நீர்பாசன அமைச்சிற்கு சுவீகரித்தல் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும். | நீர் வழங்கல் கருத்திட்டத்தை செயற்படுத்த இயலுமானவாறு கால்வாய் கருத்திட்ட நிர்மாணத்தை துரிதப்படுத்த காணி சுவீகரிப்பு மற்றும் இழப்பீடு செலுத்துதல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (x) | மொரகஹகந்த நீர்தேக்கத்தில் இருந்து கந்தரா ஒய வரை 96 கிலோ மீற்றர் தூரத்திற்கு செல்லும் வடமத்திய மாகாண கால்வாயின் 27.7 கிலோ மீற்றர் சுரங்க கால்வாய மாத்திரம் 2025 ஆண்டின் நிகழ்சித் திட்டம் நிறைவடையும் போது பூர்த்தி செய்ய தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக கிலோ மீற்றர் 68.3 ஆன எஞ்விய கால்வாயை நிர்மாணித்து அதன் நலன்களை பெற்றுக் கொள்ள உறுதியான திட்டமொன்றை கணக்காய்வு திகதி வரை சமர்பித்திருக்கவில்லை. 27.7 கி.மீ நீளமான சுரங்கக் கால்வாய் அகழ்வு ஒப்பந்தத்தின் முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 திகதி வரை 21 சதவீதமானது. | எஞ்சிய ஒப்பந்த பொதியை பெறுகைக்காக அனைத்து ஆவணங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தத்தை செயற்படுத்த தேவையான நிதி கிடைத்த பின்னர் எந்த சந்தர்பத்திலும் டென்டர் வழங்க முடியும். நிதி மூலங்களை பெற்றுக் கொள்ள வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் பல்வேறு சர்வதேச நிதியை வழங்கும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகின்றது. | நிகழ்நிலை நலன்களை பொது மக்களிற்கு பெற்றுக் கொள்ளக் கூடியவாறு திட்டத்தை தயாரித்து சமர்பிக்க வேண்டும். |
| (ஒ) | 2018 ஆண்டில் ரூபா 7,146.91 மில்லியன் பெறுமதிக்கு ஒப்படைத்திருந்த களுகங்கை மொரகஹகந்தையை இணைக்கும் சுரங்க கால்வாய் நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2021 செப்டம்பர் 10 திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதும் நிறைவு செய்ய வேண்டிய காலத்தினுள் நிறைவு செய்ய முடியாததால் 2023 திசெம்பர் 21 வரை நீடித்திருந்தது. எனினும், அத்திகயிலும் நிர்மாண முன்னேற்றம் 90 சதவீதமாகும். | 2024 ஆகஸ்ட் 31 வரை மேலும் நீடிப்பொன்றை அமைரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழுவினால் பரிந்துரைத்துள்ளதுடன் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவுள்ளது. | கருத்திட்டத்தை நிறைவு செய்து நலன்களை வழங்க வேண்டும். |
| (ஓ) | மஹவெலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்சித் திட்டத்தினால் 2022 ஆண்டில் பெற்ற பசளை இருப்பொன்று கமநல அமைச்சின் கீழுள்ள 02 பசளை கம்பனிகளிற்று ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அங்கு 55.23 மில்லியன் பெறுமதியான பசளை 161.5 மெ.டொன் (3,230 உறைகள்) பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணை நடாத்த நீர்பாசன அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட விசாரணை குழுவினால் துறைமுக அதிகாரசபையின் அறிக்கையை மீண்டும் சரிசெய்து அந்த சரியான அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வழங்கல் கம்பனியிடமிருந்து பற்றாக்குறையை அறவிட பரிந்துரைத்திருந்த போதும், அந்த நட்டத்தை மீளாய்வாண்டிலும் அறவிட இயலாதிருந்தது. | இந்த பிரச்சினையை புலனாய்வு செய்ய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | பசளை இருப்பு பற்றாக்குறையை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | உள்நாட்டு விவசாயப் பயிர்களை மேம்படுத்தும் நிகழ்சித் திட்டத்தின் கீழ் 5 மஹவெலி வலயங்களில் மற்றும் ஹ"ருளு குளப் பிரதேச விவசாயிகளிற்கு கலப்பு மிளகாய் விதைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யவதற்காக Poly Tunnel அலகுகள் 50 இனை வழங்கி பொருத்தும் கருத்திட்டமொன்றை ரூபா 91.57 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு செயற்படுத்தப்பட்டு இருந்தது. இதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் Poly Tunnel தயாரிக்கும் முன் அநுபவம் பெற்றிருக்காததுடன், 2018-2020 காலத்தில் நட்டமடைந்து 2021 காலத்தில் மாத்திரம் இலாபமடைந்த கம்பனியொன்றாகும். 2023 மே 15 திகதிக்கு வேலைகளை நிறைவு செய்ய இணங்கியிருந்த போதும் 2024 ஏப்ரல் 30 திகதிவரை Poly Tunnel 42 மாத்திரம் பொருத்தியிருந்ததுடன் 2024 மே 31 வரை மூன்று சந்தர்பங்களில் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | வேலையை நிறைவு செய்ய வழங்கிய காலம் 2024 மே 31 இனை தாண்டுமெனில், ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | விலைமனு மதிப்பீடு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்கள் சோபளின்றி செயற்பட்டுள்ளனரா என பரீட்சித்து அலுவலர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசன அமைச்சின் பெயரில் 654 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு வாகனப் பதிவேட்டின் பிரகாரம் மற்றும் பாவனையில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை 74 ஆகும். அதன் பிரகாரம் 580 வாகனங்கள் கணக்காய்வு திகதி வரையும் அமைச்சின் பொறுப்பில் இருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | அமைச்சின் பொறுப்பில் காணப்படாத வாகனங்கள் தொடர்பில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 580 வாகனங்களில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு 43 வாகனங்களும், மகாவலி அதிகார சபைக்கு 253 வாகனங்களும், எரிசக்தி அமைச்சிற்கு 04 வாகனங்களும், ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு 28 வாகனங்களும் விடுவிக்கப்பட்டு நீண்ட காலம் சென்றுள்ள போதும் உரிமையை அந்த நிறுவனங்களிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. குறித்த வாகனங்கள் அந்த அந்த நிறுவனங்களில் காணப்படுவதாக வருடாந்தம் உறுதிப்படுத்தல் செய்திருக்கவில்லை. | அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களிற்கு இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு அவைகள் குறித்த திணைக்களங்கள், நிறுவனங்களிற்கு அல்லது கருத்திட்டங்களிற்கு வழங்கப்பட்ட பின்னர் தொடர்ந்தும் அந்த வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் வாகனங்களை பொறுப்பேற்ற நிறுவனங்களால் செய்யப்பட வேண்டும். நீர்ப்பாசன | வாகன நிருவாகத்தின் மீதான உள் கட்டுப்பாடு பலப்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களம், மகாவலி அதிகாரசபைக்கு தனியான போக்குவரத்து பிரிவுகள் உள்ளதுடன் அந்த பிரிவுகள் மூலம் குறித்த வாகனங்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. கருத்திட்டங்களிலும் போக்குவரத்து விடயத்திற்கு பொறுப்பான அலுவலர்களினால் ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் உரிய வாகனங்கள் தொடர்பான பணிகள் மேற்கொள்கின்றனர். இந்த வாகனங்கள் பற்றிய தகவல்களை குறித்த நிறுவனங்கள் அல்லது திட்டங்களில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். இந்த வாகனங்கள் தொடர்பாக லொக் குறிப்புக்களை பேணிக் கொள்வது ஒவ்வொறு நிறுவனத்தினாலும் செய்யப்பட வேண்டுமென அவர்களிற்கு அறிவுரை வழங்கி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | |
| (இ) | மகாவலி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட 253 வாகனங்களில் 16 வாகனங்கள் மகாவலி அதிகாரசபையின் பொறுப்பில் இருக்காததுடன் அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் பதிவு செய்யப்படாது வாகனங்கள் பல்வேறு பிரிவுகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் பிரகாரம் 11 டபெல் கெப் வண்டிகள் DSDP/தனமல்வில இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட போதும் மகாவலி அதிகாரசபையின் நிறுவன கட்டமைப்பிற்குள் அவ்வாறான வலய அலுவலகம் எதுவும் தனமல்விலவில் அமைக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த விடயம் தொடர்பாக மகாவலி அதிகார சபையிடம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் விசாரித்துள்ளதுடன் பதில்கள் கிடைத்த பின்னர் தங்களிற்கு சமர்ப்பிக்கிறேன். | அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களிற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அமைச்சின் செயலாளரின் பெயரில் காணப்பட்ட இலக்கம் 56-8184 கொண்ட கெப் வண்டி அமைச்சின் அனுமதியின்றி மகாவலி அதிகாரசபையினால் 2023 ஆண்டு ஏலத்தில் விற்கப்பட்டிருந்ததுடன் அதன் வருமானம் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்படவில்லை. | குறித்த விடயம் தொடர்பாக மகாவலி அதிகார சபையிடம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் விசாரித்துள்ளதுடன் பதில்கள் கிடைத்த பின்னர் தங்களிற்கு சமர்ப்பிக்கிறேன். | வாகன ஏலவிற்பனை குறித்து பரிசீலிக்க வேண்டியதுடன் அதன் வருமானம் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதனை உறுதி செய்ய வேண்டும். |

## 3.4 இழப்பு மற்றும் சேதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டது தொடர்பான கூற்றில் மேலும் அறவிட வேண்டிய அல்லது பதிவழிக்க அல்லது கைவிடப்பட்ட வேண்டிய 2 வாகன விபத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 10,561,210 மீதி நிலவியதுடன், இதில் இலக்கம் WPPG 0456 வாகன விபத்திற்குரியதாக ஏற்பட்ட இழப்பு ரூபா 10,482,500 தொகையை 2023 திசெம்பர் 31 திகதிவரை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. விபத்து இடம்பெற்ற போது சாரதி குடிபோதையில் வாகனத்தை செலுத்தியதால் காப்புறுதி நிறுவனம் உரிமை செலுத்த மறுத்திருந்ததுடன் நி.பி. 104 விசாரணையில் பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினரான சாரதியிடம் இழப்பை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 104 (4) பிரகாரம் விசாரணையின் படி குற்றவாளியாகியுள்ள திரு எம்.டப்.விஜித பண்டார விஜேதுங்க அவரிடமிருந்து ரூபா 10,482,500 இழப்புத் தொகையை அறவிடுவது தொடர்பாக மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் கருத்திட்டத்தின் பணிப்பாளரினால் 2022.11.22 மற்றும் 2023.02.06 திகதிய கடிதத்திற்கு பதிலளித்து இருக்கவில்லைை. அதன் பின்னர் அமைச்சினாலும் 2023.10.10 திகதி கடிதமொன்றை அனுப்பி, கடிதம் கிடைத்த 7 நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும் எனவும் இல்லையெனில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரிடம் தெரிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படுமெவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. உரிய இழப்பீட்டுத் தொகையை அறவிட தேவையான சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட உதவி மற்றும் ஆலோசனையை கோரி 2023.10.09 திகதிய கடிதம் மூலம் உரிய ஆவணங்களை உள்ளடக்கியதாக அமைச்சின் சட்ட அதிகாரியினால் செயலாளர் அவர்களின் ஊடாக கௌரவ சட்டமா அதிபருக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நி.பி. விசாரணையின் பரிந்துரை பிரகாரம் அந்த இழப்பை விரைவில் அறவிட வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் கடைப்பிடிக்கும் கொடுப்பனவு நடைமுறை, நிதிப் பிரமாணம் 135 பிரகாரம் நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான கடமைகளை ஒப்படைத்தலிற்கு இணங்காததால் அந்த நடைமுறையை சரிசெய்யுமாறு 2011 மார்ச் 22 திகதி இடம்பெற்ற அரச கணக்குகள் மீதான செயற்குழு கூட்டத்தில் அமைச்சின் செயலாளரிற்கு கட்டளையிட்டு 13 ஆண்டுகள் கடந்திருந்த போதும் 2024 மே 31 திகதி வரை கட்டளையை நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை. | நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் கடைப்பிடிக்கும் கொடுப்பனவு நடைமுறை, நிதிப் பிரமாணம் 135 பிரகாரம் நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான கடமைகளை ஒப்படைத்தலிற்கு இணங்காததால் அந்த நடைமுறையை சரிசெய்யுமாறு அரச கணக்குகள் மீதான செயற்குழு கூட்டத்தின் கட்டளைக்கு, அரச கணக்குகள் மீதான செயற்குழு தவிசாளரிற்கு MI/F- | அரச கணக்குகள் மீதான செயற்குழுவினால் வழங்கிய கட்டளைகளை நடைமுறைப்படுத்தி அது தொடர்பான மதிப்பீட்டுடன் அரச கணக்குகள் மீதான செயற்குழுவிற்கு அறிக்கையிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | **13/**AQ/IRRI DEPART/GEN மற்றும் 2023.12.01 திகதிய மேவுகை கடிதம் மூலம் பதில் முன்வைக்க்பபட்டுள்ளது. | |
| (ஆ) | மொரகஹகந்த நீர் மின்நிலைய கருத்திட்டத்தின் I, II மற்றும் III கட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்திற்காக 2021 - 2023 காலப் பகுதியினுள் இலங்கை மஹவெலி அதிகாரசபையினால் ரூபா 3,697,431,708 பட்டியல்களை சமர்ப்பித்துள்ள போது அவற்றில் 23 சதவீதம் அல்லது ரூபா 853,731,252 மாத்திரம் இலங்கை மின்சார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு மேற்குறித்தவாறு செலுத்த வேண்டிய நிலுவை வருமான கூட்டுத் தொகை ரூபா 2,843,700,456 ஆனதுடன் சமர்பித்திருந்த பட்டியல்களிற்காக கொடுப்பனவு செய்ய வேண்டிய திகதியை நியமித்து, போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வட்டி அறவிட முடியுமானவாறு உடன்படிக்கை செய்திருக்காததால் இலங்கை மின்சார சபையிடமிருந்து குறித்த தொகையை மற்றும் வட்டியை அறவிட முடியாதிருந்தது. | இந்த ஆண்டினுள் குறித்த பட்டியல்கள் தீர்க்கப்பட்டனவா என்பது தொடர்பாக அறிவிக்கும் போது மின்சார சபையினால் இந்த ஆண்டினுள் எமக்கு கிடைக்க வேண்டிய பட்டியலிற்காக மாற்றிய நிதி அளவை பட்டியல்களாக வழங்காததால் பெறுமதியை வழங்குவது பிரச்சினைக்குரியதாக உள்ளது. இலங்கை மின்சார சபையிடமிருந்து அறிவிட வேண்டிய நிலுவை வருமானம் தொடர்பாக மற்றும் செலுத்த வேண்டிய திகதியை நியமித்து போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வட்டி அறவிட முடியுமானவாறு உடன்படிக்கை கைச்சாத்திட முறைமையொன்றை தயாரித்து எதிர்காலத்தில் அதனை நடைமுறைப்படுத்த உரிய தரப்பினரிற்கு அறவிக்க நடவடிக்கை எடுப்பதாக மேலும் தயவுடன் அறிவிக்கிறேன். | இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமானம் தொடர்பாக மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய திகதியை நியமித்து போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வட்டி அறவிடும் வகையில் உடன்படிக்கை செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியின் கீழ் 2003-2013 கால எல்லையினுள் செயற்படுத்தியிருந்த நிவத்கம் தனன வலுவூட்டல் (PEACE) கருத்திட்டத்தின் 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயத்தின் அறிக்கை வெளியிடப்பட்டு 10 ஆண்டுகள் கடந்துள்ள போதும் அதனூடாக சுட்டிக்காட்டியுள்ளக சொத்துக்கள் நிருவாகத்தின் காணப்பட்ட பலவீனங்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தி இருக்கவில்லை. அந்த அவதானிப்பு தொடர்பாக JICA நிறுவனத்தினால் தீர்வுச் சான்றிதழ் ஒன்றை கோரி ஓராண்டு கடந்துள்ள போதும் கருத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்த நீர் பவுசர், கெப் வண்டி மற்றும் குளிரூட்டி கெப் வண்டியின் இருப்பு மற்றும் பயன்பாடு பற்றிய நம்பகமான தகவல்கள் அமைச்சினால் சமர்பித்திருக்காத காரணத்ததால் குறித்த தீர்வுச் சான்றிதழை வழங்க முடியாதிருந்தது. அதன் காரணமாக | நிவத்கம் தனன் மற்றும் வலுவூட்டல் (PEACE) கருத்திட்ட 2013 திசெம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்காக தீர்வுச் சான்றிதழை பெற்றுக் கொள்ளவதற்குரியதாக கணக்காய்வு அறிகையில் வினவப்பட்ட விடயத்திறகாக தகவல்களை வழங்க நீர்பாச அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட ஐவரைக் கொண்டு குழுவின் மூலம் கருத்திட்டத்திற்காக கொள்வனவு செய்த நீர் பவுசர், புரோசோ கெட் வண்டி மற்றும் குளிரூட்டி கெப் வண்டி ஆகிய நிலையான சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட புலனாய்வின் பிரகாரம், விடயங்களை உறுதி செய்வதற்குரிய ஆவணங்கள் | சொத்துக்கள் நிருவாகத்தின் பலவீனங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயத்தினால் சுட்டிக் காட்டியுள்ள விடயங்கள் தொடர்பாக போதிய கவனம் செலுத்தி தீர்வுச் சான்றிதழை உறுதி செய்யாத அலுவலர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| யப்பான் அரசின் கடன் உதவித் தொகையை ஒரே முறையில் தீர்ப்பதற்கு நேரிடும் நிலைமை இலங்கை அரசிற்கு உருவாகியிருந்தது. | உள்ளிட்ட இறுதி அறிக்கை சமர்பிக்கப்பட்டுளளது.. | |
| (ஈ) அமைச்சின் கீழுள்ள மஹவெலி அதிகாசபையின் சொத்துக்களை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட மஹவெலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வணிக (தனி) கம்பனி கருத்திட்ட குழுவினால் தெரிவு செய்த வெளி முதலீட்டாளர் ஒருவருடன் பொது தனியார் கூட்டுமுயற்சியாக மறுசீரமைக்க 2018 செப்டம்பர் 18 திகதிய இலக்கம் அமப/18/2083/803/031 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனி பொது தனியார் பங்குகளைக் கொண்ட கூட்டிணைந்த வியாபாரமாக செயற்படுவதற்கான விருப்பத்தை கோரி 2022 பெப்ரவரி 28 திகதி 2022/338/5117 இலக்க தீர்மானம் மூலம அதிகாரசபையின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. குறித்த மறுசீரமைப்பிற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் விடயங்களின் கால சட்டகத்தின் பிரகாரம் 2024 ஏப்ரல் 22 திகதி வரை பொருத்தமான கருத்திட்டத்தை தெரிவு செய்ய வேண்டிய போதும், இந்த நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படவில்லை. | மறுசீரமைப்பு நிகழ்சித் திட்டத்தில் செய்ய எதிர்பார்க்கப்படும் பணிகளின் கால சட்டகத்தின் பிரகாரம் முதலீட்டாளர்களிடம் இருந்து கருத்திட்ட அறிக்கையை பெற்றுக் கொள்வது வரையான செயற்பாடுகள் கால சட்டகத்தில் குறிப்பிடப்படும் கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் கிடைத்துள்ள கருத்திட்ட அறிக்கையை, கருத்திட்ட குழுவிற்கு சமர்பித்துள்ள போதும் அவற்றிற்கிடையில் இருந்து பொருத்தமான கருத்திட்டத்தை தெரிவு செய்யும் செயன்முறையை கருத்திட்ட குழுவினால 2024.07.30 திகதி வரை நிறைவு செய்திருக்கவில்லை. | மறுசீரமைப்பு அங்கீகாரத்தின் பிரகாரம், எதிர்பார்த்த பணிகளின் கால சட்டகத்தின் பிரகாரம் முதலீட்டாளர்களின் பொருத்தமான கருத்திட்டத்தை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு பரிந்துரை உத்தியோகத்தரின் கருத்துரை | |
|---|---|---|
| (அ) நீர்பாசன அமைச்சிற்கு 2018 ஆண்டில் இணைக்கப்பட்ட இலங்கை பொறியியல் சேவை தரம் III அலுவலர் ஒருவரிற்கு அமைச்சின் உதவி பணிப்பாளர் (பெறுகைகள்), பணிப்பாளர் (தொழிநுட்ப கணக்காய்வு) ஆக அமைச்சின் இரண்டு பதிவிகள், அதன் கீழுள்ள கம்பனி ஒன்றில் பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவராக மற்றும் அமைச்சின் கீழுள்ள கருத்திட்டமொன்றில் பணிப்பாளர் என 4 பதவிகளில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | | |
| (i) நீர்பாசன அமைச்சின் பணிப்பாளர் (தொழிநுட்ப கணக்காய்வு) பதவியில் | 2020 செம்டம்பர் 15 திகதியிலிருந்து 2023 ஏப்ரல் 20 திகதி வரை கடமை | வழமையான பதிக்கு மேலதிகமாக கடமை |

| | | | |
|---|---|---|---|
| | கடமை நிறைவேற்றுவதற்காக குறித்த அலுவலர் 2018 செப்டம்பர் 15 திகதியிருந்து நியமிக்கப்பட்ட போதும் அதற்கான அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிறைவேற்றுவதற்காக அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் இருந்து முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வது அதன் போது நிலவிய கொரோனா நிலைமையின் மீது கடமைக்காக அலுவலர்களின் வருகை மட்டுப்படுத்தப்பட்டதனால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க தாமதித்துள்ளது. பின்னர் அப்பதவி வெற்றிடமானதுடன் அதற்காக MI/MA/AD/02/07 மற்றும் 2023.07.11 திகதிய கடிடம் மூலம் பொருத்தமான நிரந்தர அலுவலர் ஒருவரை அப் பதவிக்கு நியமிக்குமாறும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவுருத்தப்பட்டுள்ளது. எனினும் குறித்த பதிவியில் கடமை நிறைவேற்றுவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. | நிறைவேற்றுவதற்காக அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ii) | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இன் 2:3:2 பிரிவின் பிரகாரம் கருத்திட்டமொன்றின், கருத்திட்ட பணிப்பாளர் பதவிக்கு முழுநேர அடிப்படையில் அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டிய போதும் காலநிலை மாற்றங்களிற்கு இயைபாக்க நீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் கருத்திட்ட பணிப்பாளர் பதவிக்கு 2020 செப்டம்பர் 29 திகதியிலிருந்து பதிற் கடமை அடிப்படையில் குறித்த அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தார். | அமைச்சின் கருத்திட்ட ஆட்கள் மற்றும் முன்னேற்ற முகாமைத்துவ பிரிவிலிருந்து இது தொடர்பான விடயங்கள் வினவப்பட்டுள்ளன. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | அமைச்சிற்கு கீழான இலங்கை மஹவெலி அதிகாரசபைக்கு சொந்தமான கம்பனியொன்றாக மஹவெலி மதியுரை பணியகம் நிறுவப்பட்டிருந்தது. அரச வேவை பதியொன்றில் இருக்கையில் அவ்வாறான நிறுவனமொன்றில் பதவி வகிப்பதற்கான ஏற்பாடு இல்லாததுடன் அரச சேவை ஆணைக்குழு நடைமுறை விதி பிரகாரம் அவ்வாறான நிறுவனமொன்றில் அரச அலுவலர் ஒருவரை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக அல்லது அரச சேவையிலிருந்து விடுவிக்க வேண்டும். எவ்வாறாயினும் இந்த அலுவலர் அரச சேவை பதவியொன்றில் இருக்கும் | இது தொடர்பாக MCB(Sec)2021 கடிதக் கோவை மூலம் செயற்பட்டுள்ளதால் அது தொடர்பாக மஹவெலி மதியுரை சேவைகள் பணியகத்திடம் விடயங்கள் வினவப்பட்டுள்ளன. | அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதே மஹவெலி மதியுரை பணியகத்தில் பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார். | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் அமைச்சின் அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் 441 ஆனதுடன் உள்ளவாறான ஆளணியினர் 353 ஆகும். அதன் பிரகாரம், 16 சிரேஷ்ட நிலை பதவிகளிலும், 03 மூன்றாம் நிலைப் பதவிகளிலும், 53 இரண்டாம் நிலைப் பதவிகளிலும், 16 ஆரம்ப நிலைப் பதவிகளிலுமாக 88 வெற்றிடங்கள் காணப்பட்டன. | 2023 இல் அமைச்சின் மஹவெலி பிரிவில் 188 அங்கீகார ஆளணியினரில் 10 சிரேஷ்ட நிலை பதவிகளும் 15 இரண்டாம் நிலை பதவிகளும் 12 ஆரம்ப நிலை பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. பல நோக்கு அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் ஆரம்ப நிலை சாரதி பதிவியொன்றிற்கு அலுவலர் ஒருவரை தற்காலிகமாக ஆட்சேர்க்கப்பட்டுள்ளார். | ஆளணியினர் தேவைப்பாட்டை மீளாய்வு செய்து தேவையற்ற பதிவிகளை ஒழுக்கி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |